Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY SM TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472


மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 06 (29.01.2004) வியாழக்கிழமை இதழ் :120

# சமாதான முயற்சியை முன்னகர்த்துவதற்கு இந்தியாவின் உளரீதியான ஆதரவு தேவை!

## இளைஞர்களின் தாக்குதலில் வயோதிபர் பரிதாப மரணம்!

(ஊரெழு)

இளைஞர் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். ஊரெழு வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரான எஸ்.தில்லையம்பலம் (வயது 61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொலைசெய்யப்பட்டவரின் பிள்ளைகளுடன் தகராறொன்றில் ஈடுபட்ட இளைஞர் கும்பல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத உதவி தேவையில்லை என்கிறார் ரிரோன்

(புதுடெல்கி)

**நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக - இந்தியா உளரீதியான ஆதரவை வழங்க வேண்டும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

இந்தியாவிற்கு விஜயம் செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக இந்தியாவின் பங்களிப்பைக்கோரி இந்திய அரசியல தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

புதுடெல்கியில் நடைபெறும் ஆசியப் பிராந்தியப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோமவன்சவைச் சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு!

(கொழும்பு)

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பதற்குப் பலமுறை முயன்றபோதும் அதற்கு அவர் மறுத்துவருகின்றார்.

கடந்த வாரம் நாடு திரும்பிய ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச, ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்த போதும் - அதற்கு ஜனாதிபதி தரப்பிட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி இணைந்துள்ளமை ஜனாதிபதி மீதான நம்பிக்கையை குறைத்துள்ளது!

## தமிழ்ச்செல்வன் பி.பி.சிக்கு பேட்டி

(கொழும்பு)

ஜனாதிபதியின் கட்சி தீவிர இனவாதமிக்க ஜே.வி.பி. கட்சியுடன் இணைந்திருப்பது, அவர் மீதான நம்பிக்கையைக் குறைத்துள்ளது என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பி.பி.சியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

சமாதான முன்னெடுப்புக்கள் மிக முக்கிய கட்டத்தை எட்டியபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அரசாங்கத்திடமிருந்து முக்கிய மூன்று அமைச்சுப் பதவிகள் பறித்தெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சமாதான முன்னெடுப்புக்களைக் கொண்டு நடத்துவதற்கு பிரதமரும் ஜனாதிபதியும் பின்வாங்கிக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருக்கின்றனரே தவிர எதுவித முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. இது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தீவிர இனவாதம் பேசி வரும் - இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதையே விரும்பாத ஜே.வி.பியுடன் ஜனாதிபதியின் கட்சி கூட்டுச் சேர்ந்திருப்பது ஜனாதிபதியின் செயற்பாடுகளில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயல் சமாதான முன்னெடுப்பை மிகவும் பாதிக்கும் வகையான பாதையில் கொண்டுசெல்வதாக உணரச் செய்கிறது.

விடுதலைப் புலிகளையும் சமாதான முயற்சிகளையும் விமர்சிப்பவர்களில் முன்னணியில் திகழ்பவர்கள் ஜே.வி.பியினர். இவர்கள் தற்போது அரசியல் ரீதியான நலனுக்காக சுதந்திரக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கக் கோரி தென்மராட்சி தெற்கு மக்கள் சாகும்வரை உண்ணாவிரதம்!

## ஜப்பானிய உயர்மட்டத் தூதுக்குழு யாழ். - கிளிநொச்சிக்கு விஜயம்!

(கொழும்பு)

ஜப்பானிய உயர்மட்ட பொருளாதார தூதுக்குழுவொன்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளுக்கு விஜயம் செய்து, புனரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டவுள்ளது.

ஜப்பானியத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தத் தகவல்

## மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கக் கோரி

# தென்மராட்சி தெற்கு மக்கள் சாகும்வரை உண்ணாவிரதம்!

## சுதந்திர தினத்தன்று ஆரம்பமாகும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கிலுள்ள தனங்களப்பு, மறவன்புலோ மற்றும் கைதடி - நாவற்குழி பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி சுதந்திர தினமான எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ள சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரிடமும் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

இந்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்கான ஆதரவை திரட்டும் முகமாக பொதுக் கூட்டம் ஒன்றிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணியளவில் கோயிலாக்கண்டி மஹாலட்சுமி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிந்த இராணுவ இணைப்பதிகாரி நீக்கம்!

## ஒரு வாரத்தில் இரண்டாவது சம்பவம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சில் - இராணுவ இணைப்பு அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் பி.ரணசிங்க திடீரென அந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 23 ஆம் திகதி முதல் இராணுவ இணைப்பதிகாரிப் பதவியிலிருந்து பிரிகேடியர் பி.ரணசிங்க நீக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவருக்குப் பதிலாக, புதிய இராணுவ இணைபபதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெயந்த ரணவீர நேற்றுமுதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சினால் திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்ற அறிவிப்புக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் விசேட ஆலோசகராகப் பணியாற்றிவந்த - முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மகன் ரவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானிய உயர்மட்டத் தூதுக்குழு யாழ். - கிளிநொச்சிக்கு விஜயம்!

(கொழும்பு)

ஜப்பானிய உயர்மட்ட பொருளாதார தூதுக்குழுவொன்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளுக்கு விஜயம் செய்து, புனரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டவுள்ளது.

ஜப்பானியத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பொருளாதாரகூட்டுறவுக்கான உயர்மட்டத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு; இளைஞர்களை இனங்காட்டினார்!

(யாழ்ப்பாணம்)

பதினாறு வயதுச் சிறுமியொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இளைஞர்கள் இருவரை அந்தச் சிறுமி நேற்று அடையாளம் காட்டினார். கடந்த இருவாரங்களுக்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உறவினர் ஒருவருக்கு துணையாக நின்ற பதினாறு வயதுச் சிறுமியொருவரை இளைஞர்கள் நான்குபேர் சேர்ந்து யாழ். கோட்டைப் பகுதியில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடிக்கு மத்தியிலும் சமாதானத்திற்காக காத்திருக்கிறோம்!

## மூத்த தளபதி கேணல் கருணா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசியல் நெருக்கடிகள் மத்தியிலும் நாம் சமாதானத்திற்காகக் காத்திருக்கின்றோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

ஊடகமொன்றிற்கு நேற்று அளித்த செவ்வியொன்றிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

FASHION BEAUTY CORNER
(For Ladies)
(நவநாகரிக நங்கையின் இருப்பிடம்)

- முக ஒப்பனை (Make up)
- மணப்பெண் அலங்காரம் (Bridal Dressing)
- Faciel, Birthday, Structure, Waxing, Treading, Hair dye, Henna treatment, Perm and straightening
- ஓடருக்கு Rich Cake, சிற்றுண்டிகள் செய்துகொடுக்கப்படும். (முன்கூட்டியே ஓடர் கொடுக்கவேண்டும்)
- மாசி 3 ஆம் திகதி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

இதில் சேர விரும்புபவர்கள் தங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளவும்.
மேலதிக விபரங்களை நிலையத்தில் அறியலாம்.
திருமதி. ஜெயவாணி கஜேந்திரன்
14, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-2179)
T.P 2226864

# நீராவியடி இளைஞன் படுகொலை; சந்தேக நபர் பிணையில் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

நீராவியடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கைதான முதலாவது சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு, யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா - மாவட்ட நீதி வான் நீதிமன்றுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த ஒக்ரேபர் மாதம் 6 ஆம் திகதி - நீராவியடியில் வைத்து யோகேஸ்வரன் அஜந்தீப் என்னும் 21 வயது இளைஞன் - இளைஞர்கள் சிலரால் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலை தொடர்பாக 3 இளைஞர்களைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

இவர்களில் முதலாம் எதிரி தவிர ஏனைய இரண்டு பேரும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டனர். முதலாம் எதிரியை பிணையில் விடுவிக்க வேண்டுமெனக்கோரி, அவரது சட்டத்தரணி எஸ்.சிறிகாந்தா யாழ். மேல்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனு மீதான விசாரணைகளின்போது, சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு மேல்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பித்தது. இதனையடுத்து, நேற்று இது தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளின்போது முதலாவது சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையிலும் நீதிவான் அனுமதித்தார்.

ஆட்பிணையிடுபவர்கள் யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாகவும், வாக்காளர் இடாப்பில் பெயருள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென நீதிவான் தனது உத்தரவில் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக வழக்கு விசாரணைகள் - அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

# அறிவித்தல்

**2003 ஆண்டு டிசெம்பர் இலவச நிவாரணம் வழங்கல் சம்பந்தமாக உணவுப் பொருட்கள் பற்றிய விபரங்கள் பொது மக்கள் நலன்கருதி கீழே தரப்பட்டுள்ளன.**

**1) வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், தீவகம் ப.நோ.கூ சங்கங்கள் மூலம் பெறும் பயனாளிகளுக்கு**

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோகிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 30.50 | 6.475 | 11.625 | 15.975 | 19.200 | 24.850 |
| தீட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

**2) யாழ்ப்பாணம், நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம், சங்கானை, சுன்னாகம், புங்குடுதீவு நயினாதீவு, நெடுந்தீவு ப.நோ.கூ சங்கங்கள் மூலம் உலர் உணவு பெறும் பயனாளிகளுக்கு**

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோகிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 30.00 | 6.575 | 11.825 | 16.250 | 19.525 | 25.250 |
| தீட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

**3) உடுப்பிட்டி, கட்டைவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, புலோலி, மருதங்கேணி, சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ப.நோ.கூ சங்கங்கள் மூலம் உலர் உணவு பெறும் பயனாளிகளுக்கு**

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோகிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிகப்பு நாட்டரிசி | 29.00 | 6.800 | 12.250 | 16.800 | 20.200 | 26.125 |
| தீட்டல் பச்சை அரிசி | 27.50 | 2.750 | 5.250 | 7.000 | 8.500 | 10.500 |
| சீனி | 34.84 | 1.150 | 2.200 | 3.125 | 3.600 | 4.250 |
| பருப்பு | 56.67 | 0.400 | 0.700 | 0.900 | 1.100 | 1.150 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336/= | 616/= | 840/= | 1008/= | 1260/= |

**பயனாளிகள் மேற்படி நிவாரணப் பொருட்களைப் பெறும் பொழுது அவற்றின் அளவு, நிறை ஆகியவற்றை சரிபார்த்துக் கொள்வதற்காக மேற்படி விபரங்கள் தரப்பட்டுள்ளன.**

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி-2181)

பயிற்சி
சோப் தயாரிப்பதற்கான பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கபபெறும்.
மில்க் வைற் தொழிலகம்,
525/2, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2182)

சிறு விளம்பரம்
விற்பனைக்கு
504 (பழைய இல:- 165) கொழும்புத்துறை கிழக்கு என்னும் முகவரியில் அமைந்ததும் நெடுங்குளம் வீதிக்கு கிட்ட உள்ளதுமான ஐந்து பரப்புக்கு மேற்பட்ட குடியிருப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு - சிவப்பிரகாசம், மே/பா கருணாகரன், டச்றோட், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
(609)

தேவை
தச்சு, உலோக ஒட்டு வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.
நரீன் தளபாட நிலையம், 273, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(சி-2173)

யசோ இறபர் ஸ்டாம்

75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

திறஞ்சனாஸ் சங்கானை
பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள் பார்த்து ரசிக்கக்கூடிய படம்
HULK
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, 8.45 (பு.நே.)
(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)

# ஜனாதிபதி - பிரதமர் இணைந்ததன் பின்னரே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமாம்!

## கருத்துக் கணிப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து செயற்படவேண்டும் என இலங்கை மக்கள் அநேகர் விரும்புகின்றனர் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

'மார்க் ஸ்மாட்' என்ற நிறுவனமே இந்தக் கருத்துக்கணிப்பை மேற்கொண்டிருந்தது.

போர்நிறுத்தக் உடன்படிக்கைக்குப் பின்பு மக்கள் மகிழ்சியாகவுள்ளனர் என்று 57 சதவீதத்தினர் தமது கருத்தைத் தெரிவித்தனர்

இந்தக் கருத்துக்கணிப்பில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளும் முறைக்கு 50 சத வீதத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் இராஜினாமா!

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளை அடுத்தே, தான் தன் பதவியை இராஜினாமா செய்ததாகப் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா தெரிவித்தார்.

மாணவர்களின் இவ்வாறான கோரிக்கையை அடுத்து, தொடர்ந்து கடமை புரிவது தமது பதவிக்கும் துணை வேந்தர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் அவமரியாதையை ஏற்படுத்தும் எனவும், அவர் குறிப்பிட்டார்.

தமது இராஜினாமாக் கடிதத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு வருட காலமாக, தான் இந்தப் பல்கலைகழகத்தில் கடமை புரிந்ததாகவும் அவர் தெரிவித்தார். (07)

# இந்திய அழகி ரீட்டா கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு மரணதண்டனை

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

மட்டக்குளி - காக்கைதீவில் இந்திய அழகியான ரீட்டா ஜோன் மனோகரனைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று எதிரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உறுதிசெய்தது.

1999 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட்பார் நீதிவான்கள் குழு ஒன்று இந்த எதிரிகள் மூவருக்கும் மரணதண்டனையை விதித்தது.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து எதிரிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றம், மரணதண்டனையை உறுதிப்படுத்தியது. 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி ரீட்டா ஜோனை கடத்திச் சென்று, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தது தொடர்பாக, இந்த எதிரிகளுக்குக் கொழும்பு மேலநீதிமன்றத்தில் ஆறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த மரணதண்டனையானது டபிள்யூ.ஜே.அஜித் பெர்ணான்டோ அல்லது கொண்டே அஜித், கே.பி மெண்டிஸ் அல்லது ரிசங்க, சிறிசமிந்தகுமார பெர்ணான்டோ அல்லது ஆசிரி ஆகிய எதிரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு மேல் நீதிமன்றிலும், பின் உயர்நீதிமன்றத்திலும் மரணதண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

## அத்துருகிரிய சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட

# பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை!

(கொழும்பு)

அத்துருகிரிய இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள்மீது, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பரிந்துரைத்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றும் உதவியளித்த இராணுவ அதிகாரிகள்மீது இராணுவத் தளபதி ஒழுககாற்று நடவடிக்கை எடுத்தமையை அடுத்தே பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் இது குறித்து தகவல் வெளியிடுகையில்-

இந்தத் தேடுதலுக்குத் தலைமை வகித்த பொலிஸ் அதிகாரியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மற்றும் அதிகாரிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா - பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவிடம் சிபார்சு செய்துள்ளார்.

இந்த விடயத்தில் தன்னிச்சையான முடிவைத் தன்னால் எடுக்க முடியாது என்றும், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள்மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான சிபார்சுகளைப் பொலிஸ் சேவை ஆணைக்குழுவுக்கு, தான் அனுப்பியிருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயத்தை தாம் சட்ட மா அதிபருடன் கலந்தாலோசித்ததாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துருகிரிய விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே இந்த ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி வேறுபட்டுள்ளது

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

மககள் விடுதலை முன்னணியும், சிறிலஙகா சுதந்திரக்கட்சியும் தேசியப் பிரச்சினை தொடர்பாக இருவேறு நிலைப்பாடுகளில் இருப்பதாக அரசியல் சாசன அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸ் தெரிவித்தார்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஒன்றில் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இருவேறு நிலைப்பாடுகள் கொண்டுள்ளநிலையில், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிரமமான விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

அந்தந்த மாகாணங்களுக்கு அதிகாரத்தினைப் பகிர்ந்து அளிப்போம் என சிறிலங்கா சுதந்திரகட்சி கூறுகின்றது. மக்கள் விடுதலை முன்னணியோ இதனை நிராகரிப்பதுடன், மாகாணங்களுக்கு ஒரு சில அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கமுடியும் எனவும் கூறுகின்றது. இதனால், தேசிய பிரச்சினை விடயத்தில் இரு தரப்பினருக்குமிடையில் பாரிய மாற்றம் காணப் படுகின்றது. இது மிகவும் சிக்கலானது.

இவ்வாறான நிலையில் எவ்வாறு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

# வர்த்தமானி அறிவிப்பை தடைசெய்யக்கோரி ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

ரயில்வே அதிகாரசபையினால் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யாவிட்டால், ரயிலவே பாதைப் பிரிவைச் சேர்ந்த அனைத்து தொழிற்சங்கங்களும், ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரயில்வே சேவையைத் தொடர்ந்தும் சேவையாக வைத்திருக்க வேண்டுமென்றால், ரயில்வே அதிகாரசபையினை இரத்துச் செய்யவேண்டும். இந்த அதிகாரசபைக்குக் கிராமங்களில் இருக்கும் நலன்புரி நிலையங்களின் செயற்றிட்டங்கள் தொடர்பான முயற்சிகூட இல்லை. ரயில்வே அதிகாரசபையுடன் கலந்துரையாடுவது பயனற்ற விடயம் என ரயில்வே ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

ரயில்வே அதிகாரசபையை மீண்டும் திணைக்களமாக மாற்றுவது சிரமமான விடயமாகும். இருப்பினும், ரயில்வே ஊழியர்களின் நலன்களைப் பேணி, சம்பள அதிகரிப்பை எதிர்பார்ததுமே வேலைப் பகிஷகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் கோர முடிவு

## ஜீவோதய நலன்புரி மாநாட்டில் தீர்மானம்

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன்நீக்குவதுடன், விடுதலைப் புலிகள் மீதான தடையையும் நீக்கி, இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை நோர்வே மத்தியஸ்தத்துடன் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் கோரும் தீர்மானமொன்று வடக்கு - கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி ஒன்றிய வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாடு - ஒன்றியத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஏற்படுத்தி, புலிகளிடம் அதனை ஒப்படைக்கவேண்டும்.

ஜே.வி.பி. சுதந்திரக் கட்சி கூட்டுறவை வன்மையாக எதிர்க்கிறோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யுமாறு வேண்டுதல்.

உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி பொதுமக்களின் வாழ்விடங்களில் குடிகொண்டுள்ள படையினரை உடனடியாக அகற்றக் கோரல். கிழக்குப் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சின்மூலம், கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் நிதிகளை உண்மையில் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களுக்குப் பயன்படுத்தப் பிரதமர் உரிய ஆலோசனையை வழங்குதல் வேண்டும்.

ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள 3 அமைச்சுப் பொறுப்புக்களை இந்நாட்டின் சமாதானம் கருதி, அரசிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியைக் கோரல். கடந்த போர்க்கால சூழலில் காணாமற்போனோர் தொடர்பாகத் தீர்க்கமான முடிவெடுத்து உரிய நஷ்ட ஈட்டை வழங்கல், காஞ்சிரங்குடா சம்பவத்திற்கு நஷ்டஈடு வழங்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இதுவரை வழங்கப்படாதுள்ள 91 தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கி நியமனம் வழங்கல்.

கல்முனை மாநகரசபை உட்பட வடக்கு - கிழக்கின் உள்ளூராட்சி சபைகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றும் சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக் குதல் வேண்டும் போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடத் தடை!

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் மீனபிடிக்கும் இந்திய மீனவர்கள் - கடலின் அடிமட்டத்திலிருந்து மீன்களை வாரி அள்ளக்கூடிய வலைகளைப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கான கூட்டமைப்பின் பிரதிநிதி அருளானநதம் கருத்து தெரிவிக்கையில்-

இலங்கை - இந்திய மீனவர்களிடையே நடபுறவை ஏற்படுத்தி, இலஙகையில் மீன்பிடிப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தினோம். இந்திய மீனவர்கள் கடல்வளத்தைப் பாதிக்கக் கூடிய மடிகளைப பாவித்து மீன்பிடிக்கிறார்கள். இப்படிசசெய்வதால் மீன்வளம் அழிகிறது என இலஙகை, இந்திய மீனவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகையால் ஆழ்கடலுக்கு ஊடுருவிச்சென்று மீன்பிடிக்கும் வழிமுறையினை நாம் தடை செய்துள்ளோம் என்றார்.

# விவசாய பலநோக்கு மன்றங்கள் மன்னாரில் நேற்று அமைப்பு

விவசாய குடும்பங்களின் நன்மை கருதி, விவசாய பலநோக்கு மன்றங்கள் இரண்டு மன்னார் மாவட்டத்திலே திறந்து வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வைபங்கள் நேற்று நடைபெற்றன. இதில் - மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.விஸ்வலிங்கம், உதவி அரசாங்க அதிபர் எஸ்நீக்கிலஸ்பிள்ளை, மன்னார் பிரதேச செயலர் ஆர். ரதீஸன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த பலநோக்கு மன்றங்கள் நியாப் திட்டத்தின் கீழேயே அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் - உயிலங்குளம், முதலைக்குத்தி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்கள் பயன்பெறமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றங்கள் ஒவ்வொன்றிலும் தலா ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாப்படி, மொத்தமாக பதினொரு இலட்சம் சேமிப்பாக இடப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தமது தொழில் விருத்திக்கான கடனுதவிகளை பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், இழப்படுகளையும் நிவர்த்திசெய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

# தேசப்பற்று தேசிய முன்னணி மூன்று குழுக்கள் நியமனம்

தேசப்பற்று தேசிய முன்னணியின் நிறைவேற்றுக்குழு - கடந்த 25 ஆம் திகதி நடத்திய இரண்டாவது கூட்டத்தில் மூன்று குழுக்களை நியமித்திருக்கிறது.

அரசியல் நிகழ்ச்சித்திட்டம் குறித்த தேசிய கலந்துரையாடலுக்காக ஒன்றும், தேசிய பொருளாதார விழிப்புணர்ச்சிக்காக ஒரு குழுவும், கலாசார விழிப்புணர்ச்சிக்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் நிகழ்சித்திட்டம் தொடர்பான குழுவுக்கு முன்னாள கூட்டுறவு ஆணையாளர் பி.எம்.திஸநாயக்க அமைப்பாளராகவும், தேசிய பொருளாதார விழிப்புணர்ச்சிக் குழுவுக்குப் பேராசிரியர் கிரான்வில் தர்மவர்த்தன அமைப்பாளராகவும், பந்துல குணசேகர கலாசார விழிப்புணர்ச்சிக் குழுவுக்கு அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன், தேசப்பற்று தேசிய முன்னணியின் நிறைவேற்றுக்குழு, அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பக்கூட்டத்தை நடத்துவதெனவும் தீர்மானித்துள்ளது. இந்தக் கூட்டம் மகரகம தேசிய இளைஞர் நிலையத்தில் நடைபெறும் என்றும், இந்தக்கூட்டத்தில் தேசப்பறறு தேசிய முன்னணியின் யாப்பு வகுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தம்மிகவின் கொலையுடன் அரசியல்வாதி,அதிகாரிகள் தொடர்பு!

மூத்த அரசியல்வாதி ஒருவர் - ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர், மறறும் சி.ஐ.டி. அதிகாரிகள் சிலர் தனது மகனின் படுகொலையின் பின்னணியிலிருப்பதாகத் தம்மிக அமரசிங்காவின் தாயார் கிளடிஸ் சில்வா தெரிவித்தார்.

தம்மிக கொலை தொடர்பாக நடத்தப்பட்ட நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியமளித்தபோதே, தம்மிகவின் தாயார் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், சில சி.ஐ.டி. அதிகாரிகள் தம்மிகவை கைதுசெய்த பின்னர், கொலை செய்யப்போவதாக மிரட்டியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீவ்வோ தலைமையிலான

# அவுஸ்ரேலிய பிரதமர் அணி இந்திய அணியிடம் தோல்வி!

அவுஸ்ரேலிய பிரதமர் அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே நடைபெற்ற பரபரப்பான காட்சிப் போட்டி ஒன்றில் இந்திய அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய அணி, அவுஸ்ரேலிய அணியுடன் நான்கு டெஸ்ட் போட்டிகளை விளையாடிய பின்னர் தற்போது அவுஸ்ரே



லியா, சிம்பாப்வே பங்குபற்றும் முக்கோண சுற்றுப்போட்டிகளில் விளையாடிவருகின்றது.

இதேவேளை, அண்மையில் ஓய்வுபெற்ற ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்ரேலிய பிரதமர் அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே நேற்று நடைபெற்ற காட்சிப் போட்டியொன்றிலேயே, இந்திய அணி இந்த வெற்றியைப் பெற்றது.

இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்கூலி இந்தப்போட்டியில் விளையாடாத காரணததினால், ராகுல் ராவிட் அணிக்கு தலைமை தாங்கினார்.

ராவிட் தலைமையில் களமிறங்கிய இந்திய அணி, 50 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் ஹேமங பதான் அற்புதமான சதத்தினைப் பெற்றுக் கொண்டமை சிறப்பம்சமாகும். பதானி 119 பந்துகளைச் சந்தித்து தனது சதத்தினைப் பெற்றுக்கொண்டார். இதில் 8 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் என்பன உள்ளடங்குகின்றன. பார்த்திவ் பட்டேல் 19 ஓட்டங்களையும் சிரஞ்சீவ் அபிகார் 63 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ரொஹ்ஹான் கவாஸ்கரும், பதானியும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். ரொஹ்ஹான் கவாஸ்கர் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த இனிங்சில் 4 விக்கெட்டுக்கள் 5 ஓவர்களில் மளமளவென வீழ்ந்தன. இனிங்சின் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் அன்ரூ டொனால்ட் வீசிய பந்தில் பதானி ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தனது ஆட்டத்தை 255 ஓட்ட இலக்கை நோக்கி ஆரம்பித்த அவுஸ்ரேலிய பிரதமர் அணியின் அமித் பண்டாரி, ஆசிஷ் நெக்ரா ஆகியோரது பந்துவீச்சுக்களுக்கு முகம் கொடுக்கமுடியாத நிலையில் மெதுவாகவே ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த ஆரம்பித்தது. அவுஸ்ரேலிய பிரதமர் அணியின் தலைவர் ஸ்ரீவ்வோவின் விக்கெட்டை சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக் கைப்பற்றியமை குறிப்பிடத்ததாகும்.

ஸ்ரீவோ ஒரு பவுண்டரி அடங்கலாக 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். அவுஸ்ரேலிய பிரதமர் அணியின் மாக்கஸ் நோத் 74, கேற் பிறாஸ் 80 ஆகியோர்கூடிய ஓட்டங்களைப் பெற்றனர்.

கடைசிப் பந்து பரிமாற்றத்தில் 8 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்த அவுஸ்ரேலிய பிரதமர் அணி 6 ஓட்டங்களையே பெற்றது. கிறிஸ்காட்லீன் விளையாடிக்கொண்டிருந்த



வேளையில் கடைசிப்பந்தில் 3 ஓட்டங்களைப் பெறவேண்டிய அவுஸ்ரேலிய பிரதமர் அணி இரண்டு ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

இதனால், இந்திய அணி ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது. இறுதி ஓவரில் பண்டாரி பந்து வீசினார் .

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் அன்னபாக்கியம் கனகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்வார். (17)

★ ★ ★ ★ ★

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும். இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரபல தொழிலதிபர் வ.சிவசூரியகுமரன் பிரதமவிருந்தினராகவும், சிறப்புவிருந்தினராக தமிழீழ கல்விக்கழக வடமராட்சிப் பொறுப்பாளர் சி.தாயகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (17)

# யாழ்.மத்திய கல்லூரியில் நீச்சல், படகோட்டப் போட்டி

யாழ். மத்திய கல்லூரியின் 2004 ஆம் ஆண்டின் இல்லங்களுக்கிடையேயான விளையாடடுப் போட்டியினை ஒட்டி இந்தவருடம் முதன் முறையாக நீச்சல் போட்டியும், படகோட்டப் போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை செட்டிப்புலம் (சாட்டி) கடலில் நடைபெறவுள்ளது.

ஐந்து இல்லங்களைச் சேர்ந்த மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுமார் 65 மாணவர்கள் மட்டும் இந்த நிகழ்வில் பங்குகொள்கின்றனர். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும் இந்த நிகழ்வு பாடசாலை மட்டத்தில் யாழ். மாவட்டத்திலேயே நடைபெறுவது இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிய ஜூனியர் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது பாகிஸ்தான்!

17 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் அணி, இந்தியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

பெங்களூர் சின்னசாமி அரங்கில் நடந்த இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே இந்திய அணி எடுத்திருந்தது.

இதற்குப் பின் 7 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சாவ்லா, பிரேம் பிராதிக் ஆகியோர் பொறுப்பாக விளையாடி 62 ஓட்டங்கள் எடுத்து அணியை மீட்டனர். இறுதியில் இந்திய அணி 45 ஓவரில் 230 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சாவ்லா 51, பிரேம் 18 ஓட்டங்களை எடுத்தனர்.

இந்த இலக்கை எட்டிப் பிடிக்க பாகிஸ்தான் அணிக்கு அட்னான் ராஜா அலி, பியாஸ் அகமதின் அபார ஆட்டம் எளிதான வெற்றியைப்பெற்று தந்தது. இவர்கள் 4 ஆவது விக்கெட்டுக்கு 109 ஓட்டங்கள் சேர்த்தனர். அட்னான் 76, பியாஸ் 63 ஓட்டங்கள் எடுத்தனர்.

விக்கெட்டுகள் விரைவாக வீழ்த்த தவறிய இந்திய அணியினர் களத்தடுப்பில் இலகுவான பிடிகளை தவறவிட பாகிஸ்தான் அணி 43.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் அட்னான் கேர்வ் தெரிவுசெய்யப்பட்டார்.

முத்தரப்பு போட்டித் தொடரில்

# அவுஸ்ரேலிய - சிம்பாப்வேயின் பலப்பரீட்சை இன்று மெல்பேனில்

இந்திய - அவுஸ்ரேலிய - சிம்பாப்வே ஆகிய 3 நாடுகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவருகிறது. கடந்த 9 ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டித் தொடரில் இதுவரை 9 ஆட்டங்கள் முடிந்துள்ளன.

இதன்படி அவுஸ்ரேலிய 6 போட்டிகளில் விளையாடி 5 வெற்றியுடனும் 1 தோல்வியுடனும் முதல் இடத்திலும், இந்தியா 6 போட்டிகளில் 4 வெற்றியுடனும், 2 தோல்வியுடனும் 2 ஆவது இடத்திலும் உள்ளன. முதல் இரண்டு இடங்களை பிடித்த இரு அணிகளும் ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்டன. சிம்பாப்வே தான் மோதிய 6 போட்டிகளிலும் தோற்றது.

3 நாடுகள் போட்டியின் 10 ஆவது போட்டி இன்று மெல்பேனில் நடக்கிறது. இதில் அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

தொடக்கத்தில் மிகவும் மோசமாக ஆடிவந்த சிம்பாப்வே அணி, கடந்த இரண்டு போட்டிகளிலும் மிகவும் போராடியே தோற்றது. இந்தியாவுக்கு எதிராக 3 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், அவுஸ்ரேலியாவிற்கு எதிராக 13 ஓட்டங்கள் வித்தியாசத்திலுமே தோல்வி கண்டிருந்தது.

அவுஸ்ரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரரான கில்கிறிஸ்டுக்கு இன்றைய ஆட்டத்திலும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. கப்டன் பொண்டிங், பெவன், ஹைடன் ஆகியோர் தொடர்ந்து துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். அந்த அணியின் பந்துவீச்சு சிறப்பாக இல்லை என்று கருத்து நிலவுகின்றது.

சிம்பாப்வே அணியில் கேர்லிசி, இர்வீன் ஆகியோரது ஆட்டம் நன்றாக இருக்கிறது. இருவரும் இந்தியாவுக்கு எதிராக 'சதம்' அடித்து இருந்தனர். கப்டன் ஸ்ரக் துடுப்பாட்டம், பந்துவச்சு ஆகியவற்றில் நல்ல நிலையில் உள்ளார்.

இந்தியாவும், அவுஸ்ரேலியாவும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுவிட்டதால் இந்தப் போட்டியின் முடிவு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. சம்பிரதாயத்துக்காக நடைபெறும் போட்டியாக இது இருக்கும். அவுஸ்ரேலிய-சிம்பாப்வே இடையேயான இன்றைய போட்டி காலை 9.15 மணிக்கு தொடங்குகிறது.

# உக்ரேயின் பயிற்றுவிப்பாளர்கள் இலங்கையில் பயிற்சி வழங்குவர்!

## விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை

விளையாட்டுத்துறையினை முன்னேற்றுவதற்காக உக்ரேனில் இருந்து மூன்று பயிற்றுவிப்பாளர்களின் ஒத்துழைப்பை விளையாட்டுத்துறை அமைச்சு பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மெய்வல்லுநர் போட்டிகளுக்காக மூன்று பயிற்றுவிப்பாளர்கள் ஒரே தடவையில் அழைக்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

இந்த பயிற்றுவிப்பாளர்களின் செயற்பாட்டை ஆராய்வதற்கு விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டு உடல் திட நிலை நிபுணர்களின் சேவையை மெய்வல்லுநர் போட்டிகளுக்கு பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இலங்கை வந்துள்ள உக்ரேன் பயிற்றுவிப்பாளர்கள் குழு இலங்கை மெய்வல்லுநர் கனிஷ்ட அணிக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளனர். நெடுந்தூர ஓட்டப்பயிற்சிகளை வழங்குவதற்காக நிக்கலோ பற்மன்ரூவ் என்பவரும், குறுந்தூர ஓட்டப்பயிற்சிகளை வழங்குவதற்காக யமித்துறோ பற்ரேரிகன் என்பவரும், உயரம் பாய்தல் போட்டிக்காக பயிற்சிகளை வழங்குவதற்கு எரிற்ரன் செவலி என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களின் வருகைக்கு உள்நாட்டு பயிற்றுவிப்பாளர்கள் எதுவித பிரச்சினைகள் ஏற்படுத்தக் கூடாது எனவும் அமைச்சர் கேட்டுகொண்டார்.

# விளையாட்டு

# பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி நேற்றைய சந்திப்பில் உருவானது!

வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையில் நேற்று கூட்டணி உருவானது.

நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு சந்தித்துப் பேசியதையடுத்து கூட்டணி உறுதியானது.

நேற்றுக்காலை ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. போயஸ் கார்டன் வாசலில் வெங்கைய்யா நாயுடுவை அமைச்சர்கள் பன்னீர்ச்செல்வம், பொன்னையன், ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.



சுமார் 45 நிமிடங்கள் நடந்த இந்தச சந்திப் பின்போது, ஜெயலலிதாவின் நண்பரும், நடிகர் நம்பியாரின் மகனும், பா.ஜ.க. தேசியக் கவுன்சில் உறுப்பினருமான சுகுமாறன் நம்பியாரும் உடனிருந்தார். கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு முன் பிரதமர் வாஜ்பாயின் அரசை கவிழ்த்தார் ஜெயலலிதா. இந்த நிலையில் மீண்டும் இந்த இரு கட்சிகளுக்கும் இடையே கூட்டணி உருவாகியுள்ளது.

வாஜ்பாயை பிரதமராக ஏற்கும் கட்சிகளுடன் தான் கூட்டணி என பா.ஜ.க. அறிவித்ததால், கூட்டணி சேருவதை ஜெயலலிதா ஆரம்பத்தில் தவிர்த்து வந்தார். இந்த நிலையில் அவருடன் துணைப் பிரதமர் அத்வானி இரண்டுமுறை தொலைபேசியில் பேசினார். பா.ஜ.க. முக்கியஸ்தர் சுகுமாறன் நம்பியாரும் ஜெயலலிதாவை சந்தித்தார்.

அப்போது, ஜெயலலிதா வைத்த நிபந்தனைகளை பா.ஜ.க. தலைமையிடம் நம்பியார் தெரிவித்தார். இந்த நிபந்தனைகளை ஏற்க பா.ஜ.க. முன்வந்ததையடுத்து கூட்டணி உருவாகியுள்ளது.

ஜெயலலிதாவை சந்தித்தபின், நிருபர்களிடம் பேசிய வெங்கையா நாயுடு, தேசிய அளவிலான அரசியல் நிலைமை குறித்து, ஜெயலலிதாவுடன் பேசவே நான் இங்கு வந்தேன். தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. போட்டியிடும்.

எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து, முதல்வர் ஜெயலலிதாவும் மாநில பா.ஜ.க. நிர்வாகிகளும் பேசி முடிவு செய்வார்கள் என்றார். நிருபர்களிடம் ஜெயலலிதா பேசுகையில், வெங்கையா நாயுடுவுடன் நடத்திய பேசசுவார்த்தை மிக திருப்திகரமாக இருந்தது. தொகுதி உடன்பாடு குறித்து மேற்கொண்டு பேசி முடிவு செய்யப்படும் என்றார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி. மு.க. சேருமா என்று கேட்டபோது, அதற்கு நேரடியாக பதில் தர மறுத்த ஜெயலலிதா நான் உங்களிடம் என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லிவிட்டேன் என்று பதிலளித்தார்.

# ஜனாதிபதியின் நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் வெறுப்படைந்துள்ளனர்

## அமைச்சர் மகேஸ்வரன் பிரிட்டிஷ் தூதுவரிடம் தெரிவிப்பு



ஜனாதிபதியின் நடவடிக்கைகள் காரணமாக - தமிழ் மக்கள் மட்டுமல்லாது, தமிழ் அரசியல்வாதிகள் அனைவருமே வெறுப்பும், விசனமும் அடைந்துள்ளனர் என அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் - பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவர் ஸ்ரீவன் இவன்ஸை சந்தித்து கலந்துரையாடியபோதே, இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்காலை கொழும்பிலுள்ள இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு அலுவகத்தில்- அமைச்சர் மகேஸ்வரனை பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவர் ஸ்ரீவன் இவன்ஸ், பொதுநலவாய அமைப்பின் தெற்காசியப் பிரிவின் இலங்கை விவகாரங்களுக்கான அதிகாரி கத்தரின் கிறிஸ் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது, பிரிட்டிஷ் தூதுவர்- அமைச்சர் மகேஸ்வரனிடம் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்டபோதே, அவர் மேறகண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதானத்திற்கு விரோதமானவை மட்டுமல்லாது, ஜனநாயக விழுமியங்களுக்கே எதிரானவை.

மூன்று முறை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் விளைவாக, ஆட்சியில் தொடர்ந்து நீடிக்கத் திட்டமிட்டிருக்கிறார். நானும் இரு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியபிரமாணம் செய்துள்ளேன். அதன்படி பார்த்தால் நான் 2012 ஆம் ஆண்டுவரை பதவியில் இருக்கமுடியும். ஆனால், அது அரசியல் யாப்பிற்கு முரணானது.

நாம் ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவுள்ளோம். இதற்கான ஒழுங்குகளைப் பிரதமர் மேற்கொண்டு வருகிறார். ஜனாதிபதியின் சில நடவடிக்கைகள் கேலிக்கூத்தான வையாகப்படுகிறது.

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லமுயன்ற நூற்றுக்கு அதிகமான அப்பாவி இளைஞர்கள்-பொலஸாரால் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவிற்கு, தற்பொழுது ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இது குடியகல்வு - குடிவரவுத் சட்டத்திற்கு முரணானது. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

இதனால், ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால், சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்று கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்யவேண்டுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, பல முக்கியவிடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் - பிரிட்டிஷ் தூதுவர் உள்ளடங்கிய குழுவினருக்கு எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

# வினாவிடைப் போட்டியில் யாழ்.இந்து முதலிடம் !

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி கலாசார அலுவலர்கள் அமைச்சினால் க.பொ.த (உ.த) மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட வினாவிடைப் போட்டியில்- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். இந்தப் போட்டியல் பங்கு பற்றிய மாணவர்களின் விபரம் வருமாறு -

தி.மயூரன், க.சஞ்சுதன், ந.நிரஞ்சன், ச.நடராஜசர்மா.

மேற்குறிப்பிட்ட மாணவர்கள் பெப்ரவரி முதலாம் வாரத்தில் நடத்தப்படவுள்ள அகில இலங்கைப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொணடமைக்காக இந்த மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா ரொக்கப்பரசும், சான்றுப்பத்திரங்களும் வழங்கப்படுவதோடு, கல்லூரிக்கு மாகாண வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

## யாழ்.பிரதேச செயலக

# கட்டடப் பணிகள் தாமதமடைவதால் பணியாளர்கள் பாதிப்படைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக கட்டடம் திருத்தும் பணி தாமதமடைவதால், அங்கு பணிகளை ஆற்றுவதில் பெரும் சிரமங்களைப் பணியாளர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த எழு வருடங்களின் பின் யாழ்.பிரதேசசெயலகம் மீண்டும் சொந்த இடத்தில் இயக்கத்தொடங்கியுள்ளது. எனினும், அந்தக் கட்டடத்தினைப் புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதால், அங்கு பணியாற்றுவதில் ஊழியர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

போதிய இடவசதி இன்மையால், அலுவலகக் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்கள் சில இடங்களில் இடநெருக்கடிக்கு மத்தியில் பணியாற்ற வேண்டியநிலை தோன்றியுள்ளது.

இதனைவிட, நேற்றுமுன்தினம் பெய்த மழையால் - அலுவலகத்தின் மாடிப்பகுதியில் பெரும் ஒழுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதனால், அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாப்பதிலும் அலுவலக ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

அத்தோடு, வாகனங்கள் நிறுத்துவதற்கான கூடாரம் அமைக்கப்படாமையால் - பொதுமக்களும், ஊழியர்களும் தமது துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வாகனங்களை நிறுவத்துவதற்குப் பெரும் சிரமத்தை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

(ப)

## முன்பள்ளி அமைப்பு

கரவெட்டி மத்தியில் சிந்தாமணி விநாயகர் சிறுவர் முன்பள்ளி நிலையமெனும் பெயரில் முன்பள்ளி கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்த ஊரைச் சேர்ந்த பொதுமக்கள் பலரது அன்பளிப்புடன் இந்த முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

யுத்தத்தால் சேதமடைந்திருந்த யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்த அபிவிருத்திப் பணிகளில்- யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எஸ்.தங்கராஜாவும், அமைச்சர் ரவூப் ஹக்கீமும், யாழ்.மாவட்ட இணைப்பாளர் மௌலவி சுபியானும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, மாணவர்களுக்கு தைத்த சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ஆ.மதுமிதா
முகவரி : ஆனந்தமஹால், வதிரி, கரவெட்டி.

ஐந்தாவது அகவையில்



பெயர் : பி.ஜெறுபன்
முகவரி : கனல் வீதி, மாதகல்.


## நாவல் விமர்சன அரங்கு

எழுத்தாளர் தேவகாந்தனின் இலங்கையில் வெளியான முதல் நூலான 'யுத்தத்தின்-முதலாம் அதிகாரம்' எனும் நாவலின் விமர்சன அரங்கு - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. எழுததாளர் செம்யியன் செல்வன் தலைமையில் காலை பத்துமணிககு எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், விமரசன உரைகளை - க.சட்டநாதன், அ.யேசுராசா, டொக்டர் நந்தி ஆகியோர் நிகழ்த்துவர்.

## கூட்டுறவு சங்க பொதுக்கூட்டம்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம்- எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்குச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் மூத்த கூட்டுறவாளர்களைக் கௌரவித்தல், புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொளள சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் சங்கத் தலை... தெரிவித்தார்.(91)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பட்டம் பறக்கவிடும் போட்டி முடிவுகள்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, உடுப்பிட்டியில் மாபெரும் பாரம்பரிய பட்டம் ஏற்றும் போட்டியொன்று நடைபெற்றது. ரொறொன்ரோ நந்தர் சோதிட விஞ்ஞான நிறுவனத்தின் ஆதரவில், உடுபபிட்டி நலன்புரி சங்கத்தினரால் இந்தப் போட்டி நடாத்தப்பட்டது.

இருபிரிவுகளாக நடாத்தப்பட்ட இந்தப போட்டியில் - காலையில் உயரப்பறக்கும் போட்டியும், மாலையில் அழகுபட்டப் போட்டியும் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

உயரப்பறத்தல் போட்டி - முதலாமிடம் து.வீரசிங்கம், இரண்டாமிடம் கு.சஜீவன், முன்றாமிடம் வை.புருசோத்தமன்

அழகுப்பட்டப் போட்டி - முதலாமிடம் வை.புருஷோத்தமன், இரண்டாமிடம் சா.ஜீவசங்கரி, சி.சய்ஸ்ணவன், மூன்றாமிடம் து.வீரசிங்கம். (116)

### மினிபஸ் சேவை இடைநிறுத்தம்

மினிபஸ் மோதிப் பலியான பாடசாலை மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக, இளவாலை- யாழ்ப்பாணம் இடையேயான மினிபஸ் சேவைகள், இரண்டு நாள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றின்போது, பாடசாலை மாணவனொருவன் விபத்து நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இரண்டு நாட்கள் தடைப்பட்டிருந்த மினிபஸ் சேவை, நேற்றுமுன்தினம் முதல் வழமைபோல் இடம்பெற்றன. (71)

### அவசர மனிதாபிமான தேவைகளுக்கு 30 மில்லியன் ரூபா

கிளிநொச்சி மாவட்டத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான புனர்வாழ்வு மீள்குடியேற்றம், சூழல் பாதுகாப்பு மற்றும் அவசர மனிதாபிமான தேவைகளுக்கென 30 மில்லியன் ரூபா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக அதன் பொறுபபாளர் இ.ஜெகாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடமபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் 2004 ஆம் ஆண்டு நிதி வருடத்தில் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள வேலைகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே, இதனைத் தெரிவித்தார்.

### சுதந்திரப் பறவை இதழ் வெளிவந்துள்ளது

(வண்ணை)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் 2003 கார்த்திகை - மார்கழி இதழ் தேசியத்தலைவரின் அழகிய முகப்புப் படத்துடன் வெளிவந்துள்ளது.

சிறிலங்காவின் இன்றைய அரசியல் நிலையை விளக்கும் 'அமைதிக்கான மதாசூத்திரம்' என்ற ஆய்வுக் கட்டுரையும், 'விழுதாகி வேருமாகி' நூல் பார்வையும், பதிவும் போன்ற விசேட அம்சங்களுடன் இதழ் வெளிவந்துள்ளது. (111)

### மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் - நாளை பிற்பகல் இரண்டு மணிக்குப் பாடசாலையின் உப அதிபர் து.சிவராசா தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இணுவில் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் - நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர்கள் தலைமையில் மாலை இரண்டு மணிக்கு இந்தப் போட்டிகள் அந்தந்தப் பாடசாலை விளையாட்டு மைதானங்களில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்டுகிறது. (71)(116)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடற்தொழில் அமைச்சினால் கடற்தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்தப் பிரதேச கடற்தொழிலாளர் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வரும் இந்த அடையாள அட்டைகளை பெறவிரும்பும் கடற்தொழிலாளர்கள் - தமது புகைப்படத்துடன், நூறுரூபா பணம் செலுததவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (44)

### புதுக்குடியிருப்பில் குடிநீர்க் கிணறுகள் அமைப்பு

(ஆழியவளை)

நிக்கொட் நிறுவனத்தினரால் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 10 குடிநீர்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக, முல்லை மாவட்ட திட்டப்பணிப்பாளர் ரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கென நிக்கொட் நிறுவனம் 24 இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

நீர்த்தட்டுப்பாடு அதிகமாக காணப்படும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் இந்தக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (122)

### தும்பளை லூர்த்து அன்னை பெருவிழா

(ஆழியவளை)

தும்பளை புனித லூர்த்து அன்னை திருத்தலப் பெருவிழா- எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நவநாள் ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். 10 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெறும்.

11 ஆம் திகதி காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், 7.30 மணிக்கு யாழ்.ஆயரின் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலியும் இடம்பெறும். வழிபாடுகளை அருட்பணியாளர்கள் றெக்ஸ் கொன்சன்ரன், சேவியர் ஆகியோர் மறையுரையின் மூலம் நெறிப்படுத்துவர். (122)

### முல்லைத்தீவுக்கு மின் விநியோகம்

(ஆழியவளை)

முல்லை நகரின் சில முக்கிய பகுதிகளுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் மின் விநியோகம் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே 100 கி.வாற்ஸ் சக்தி கொண்ட இரு மின்பிறப்பாக்கிகள் வந்து சேர்ந்துள்ளன. மின்கம்பங்கள் நாட்டப்படும் வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக முல்லை வைத்தியசாலை, அரச செயலகம், சுகாதாரத் திணைக்களம், மக்கள் வஙகி, தபாலகம், பிரதேசசெயலகம், பாடசாலை ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யப்படவுள்ளது. (122)

### வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் கல்விகற்கும் வறிய மாணவர்களுக்கு இந்து வித்தியா விருத்திச் சங்கம் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது. இந்த புலமைப் பரிசிலைப் பெறவிரும்பும் மாணவர்கள் - தமது பாடசாலை அதிபரூடாகச் செயலாளர் இந்து வித்தியா விருத்திச் சங்கம், சரஸ்வதி மண்டபம், லோற்ஸ் வீதி, கொழும்பு என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

பின்தங்கிய பாடசாலைகளில் கல்விகற்று, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களும் - பல்கலைக்கழக பீடாதிபதிகளூடாக இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# யாழ்.மண்ணிலே ஒரு நிறுவனத்தினை உருவாக்கி பங்குச் சந்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

**Euroville investment (pvt) Ltd.** இன் முகவரும் **Bartleet Mallory stock Brokers (pvt) Ltd.** இன் நிதி முகாமையாளருமான வி.நிரஞ்சனை 86 பருத்தித்துறை வீதி, நல்லூரில், அமைந்த அலுவலகத்தில் சந்தித்தேன். இந்த நிறுவனமானது பங்குச் சந்தையினை எவ்வாறு மேற் கொண்டுவருகின்றது என்பது பற்றியும். இதனால், மக்களுக்கு ஏற்படும் நன்மை களையும், சமூகத்தில் இதற்கான அங்கீகாரத்தினையும் பற்றி விளக்கினார்.

முதலீட்டாளர்கள் பட்டியலிட்ட கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்வதும், விற்பனை செய்வதும் நிகழக்கூடிய தளம் பங்குச்சந்தை என


வி.நிரஞ்சன்

அறிமுகம் செய்துகொள்ளமுடியும். இலங்கையில் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள், கொழும்பு பங்குச்சந்தை என அழைக்கக்கூடிய நிறுவன அமைப்புசார்ந்த பங்குச்சந்தை மூலம் நிகழ்கின்றது. தற்போது இந்த அமைப்பில் சுமார் 244 கம்பனிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தக் கம்பனி களின் பங்குகளே இந்தச் சந்தைமூலம் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இந்தக் கம்பனிகளின் பங்குகளே இந்தச் சந்தைமூலம் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இந்தக் கம்பனிகள் அவற்றின் பிரதான செயற்பாடுகளின் அடிப்படையில் 16 துறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. பொருட்களுக்கான விலை நிர்ணயிக்கப்படுவதுபோன்று, பங்குகளுக்கான விலையும் அவற்றின் கேள்வி நிரம்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.

கம்பனிகள் அவற்றின் தொழிற்பாடுகளுக்கு அவசியமான மூலதனங்களை, பொதுமக்களுக்குப் பங்குகளை விற்பனை செய்தவன்மூலம் திரட்டிக் கொள்கின்றன. இவ்வாறு கம்பனி களால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பங்குகளை முதலீட் டாளர்கள் கொள்வனவு செய்வது, முதலாந்தர பங்குச்சந்தை என அழைக்கப்படும். கம்பனியொன்று முதன்முதலாகப் பொது மக்களுக்குப் பங்குகள் வழங்குவதை, ஆரம்பப் பங்கு வழங்கல் (**Initial Public offer**) என அழைக்கப்படும். ஆரம் பப் பங்குவழங்கலின் பின் - கம்பனிகளுக்குத் தம்மை கொழும் புப் பங்குச் சந்தையில் பட்டியற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சில சந்தர்ப்பங்களில், தற்போது பங்குகள் வழங்கியுள்ள கம்பனிகள் தமது மூலதனத்தை அதிரித்துக் கொள்வதற்காக மீண்டும் பொதுமக்களுக்கப் பங்குகளை வழங்கமுடியும். இவ்வாறான பங்கு வழங்க்ல், பருவாகால பங்கு வழங்கல் என அழைக்கப்படுகின்றது. (**Seasoned Public offer**) ஆரம்பப்பங்கு வழங்கல் மூலமோ அல்லது பருவகாலப் பங்குவழங்கல் மூலமோ முதலீட்டாளர்கள் பங்குகள் கொள்வனவு செய்வதை முத லாந்தரச் சந்தை (**Primar Market**) எனப்படும். முதலீட் டாளர்கள் தங்களுக்கிடையில் பங்குகளைக் கைமாற்றிக் கொள்வது இரண்டாந்தரச் சந்தை (**Secondary Market**) என அழைக்கப்படும் முதலீட்டாளர்களுக்கிடையில் எளிதாகப் பங்குகள் கைமாற்றல்கள் செய்துகொள்ளக்கூடிய இரண் டாந்தரச் சந்தை அமைப்பே, கொழும்பு பங்குச்சந்தை என இதன்மூலம் புரிந்துகெள்ளமுடியும். ஆரம்பப்பங்கு வழங் களுக்கு விண்ணப்பிப்பதன்மூலம் அல்லது இரண்டாந்தரச் சந்தையில் அதாவது, கொழும்பு பங்குச்சந்தையில் பங்கு களைக் கொள்வனவு செய்வதன்மூலம் மக்கள் தமது முத லீடுகளை மேற்கொள்ளமுடியும்.

இன்றைய பங்குச்சந்தை நடைமுறை மரபுகளுக்கமைய, பொதுக் கம்பனிகள் தம்மைப் புதிதாகப் பட்டியற்படுத் திக்கொள்வதற்கு தங்கள் விண்ணப்பப்படிவங்களைத் தரகர் நிறுவனங்கள்மூலம் கொழும்பு பங்குச்சந்தைக்கு சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு புதிய பங்கு வழங்கல்களுக்குத் தோன்றக் கூடிய ஏற்பாட்டுத் தரகர்கள் - நடுவர் என அழைக்கப்படு கின்றனர். பங்குச் சந்தையின் தேவைகளைக் கம்பனிக்கு அறிவித்தல், கம்பனியின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பங்குச்சந்தையின் 'பங்குவழங்கல்' உபகுழுவுக்கு வழங்கு தல் போன்றவை தரகர்களின் பணிகளாகும். கம்பனியின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், ஏற்பாட்டுத் தரகர் களும் பங்குச்சந்தையின் ஏனைய தரகர் நிறுவனங்களும், பொதுமக்களுக்கு பங்குகளை விற்கும் முயற்சிகளில் ஈடுபடு வர். பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு விரும்பும் பொது மக்கள் - பங்குச்சந்தையின் தரகர் நிறுவனங்கள்மூலமோ அல்லது பங்குகள் வழங்கும் பணிகளில் ஈடுபடக்கூடிய வங்கிகள் மூலமோ பங்குகளைக் கொள்வனவு செய்ய விண் ணப்பிக்க முடியும்.

நிதிச் சந்தையானது, இரண்டு பிரிவுகளாகும். ஒன்று பணச்சந்தை, இன்னொன்று பங்குச்சந்தை. கொழும்பிலே இரண்டும் மிக முன்னேற்றமாக இயங்கிக் கொண்டிருக்கின் றது. பணச்சந்தைக்கு வங்கிகள்தான் பொறுப்பு. இதனை மேற்பார்வை செய்வது இலங்கை மத்திய வங்கி - பங்குச் சந்தையினை மேற்பார்வை செய்வது இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவாகும்.

பணச்சந்தை என்று சொன்னால், எங்களுடைய பணத்தி னைக் கொண்டுபோய் வைப்பில் இடுவதாகும். பணம் எப்படி வருகின்றது என்பதைத்தானே நாங்கள் யோசிக்கின்றோம். எப்படிப் பணத்தை உருவாக்கலாம், பெறலாம் அதறகு பங்குச சந்தை வழங்குகின்றது. முதலீடுகள் வளரவேண்டும், கம்பனி நடவடிக்கைகள் வளரவேண்டும். பணச்சந்தை மட்டும் வளர்ந் தால் உள்வாங்கிக்கொள்ள முடியாது. வங்கியில் கொண்டு போய் பணத்தினை வைப்பிலிட்டு வட்டியை எடுத்து நாங்கள் வாழ்க்கையை நகர்த்தினால் சோம்பேறித்தனமானதாய் இருக்கும். அதாவது, அந்த வட்டியில் தங்கியிருத்தலாகும்.

முன்னைய காலங்களில் சிங்கப்பூர், மலேசியாவிலிருந்து முதலட்டுக்கு பணம்வரும். இப்பொழுது லண்டன், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் நமது உறவுகள் இருப்பதால், கூடுதலாகப் பணம் வருகின்றது. ஆனாலும், நுண் பொருளி யல் செய்கை இங்கே வளரவில்லை. நகையினைக் கொண்டுபோய் அடகு வைப்பதாலும், வட்டி கூடி நகை யினை மீட்க முடியாதநிலை உருவாகின்றது. சில வங்கி களின நடவடிக்கைகள் பிழையாகவுள்ளது. பணச்சந்தை பிரபல்யமாக இருக்கின்றது. ஆனால், இங்கே என்ன நடக்

களின நடவடிக்கைகள் பிழையாகவுள்ளது. பணச்சந்தை பிரபல்யமாக இருக்கின்றது. ஆனால், இங்கே என்ன நடக்

கின்றது என்றால், எங்களுடைய இடத்திலிருந்து பணத்தினை கொழும்பிற்குத்தான் அனுப்புகின்றார்கள். எங்களுடைய இடத்திற்குத் திரும்பி வரவில்லை. வங்கியில் பணத்தினை வைப்பில் இட்டு வட்டியை மட்டும் எடுத்து செலவு செய்த மக்களுக்கு எப்படியும் விளங்கும்.

எல்லா மக்களும் படிக்கவேண்டும். நிதிமுகாமைத்துவம் தெரிந்தவர்களால்தான் இந்தத் தொழிலைச் சரியாகச் செய்யமுடியும். எங்களுடைய கம்பனிகள் நிறைய இங்கே வளரவேண்டும். இன்றையகாலகட்டத்தில், சமாதானச்சூழல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சிங்களவரோடு தமிழர் கள் சேர்ந்து வாழவிரும்புகின்றார்கள். சிங்களவர் என்ன மாதிரிப் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டு மேலே இருக்கிறார்களோ அதேபோல் நாங்களும் பொருளா தார அபிவிருத்தியில் முன்னேற்றமாய் இருக்கவேண்டும். பொருளாதார அபிவிருத்தியடைந்தவர்களின் மூலம்தான் நாங்கள் இங்கே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும்.

கொழும்பில் நிறைய கம்பனிகள் வளர்ந்திருக்கின்றன. இதனால் தொழில்வாய்ப்புக்கள் நிறையப்பேருக்குக் கிடைத் திருக்கின்றன. முதலீடுகள் நிறையவே இருக்கின்றதால் நிறைய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பங்குச் சந்தையானது 1896 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதன்முதலில் அறிமுகமானது இன்றைக்கு 2004 இல் தான் நாங்கள் இதை மேற்கொள்கின்றோம். கிட்டத்தட்ட 100 வருடங்கள். இது எல்லா நாடுகளிலும் இருந்து வருகின்றது. இந்தியாவில் மாநிலங்களுக்கு ஒன்று இருக்கின் றது. இங்கேயும் மாநிலம் உருவாகலாம். நிறைய நிதிகள் வரப்போகின்றது. பங்குச்சந்தை இலங்கையில் ஒன்றுதான் இருக்கின்றது.

சமாதானக் காலம் ஆனபடியால், எல்லோரின் பார்வை ளாதார அபிவிருத்திக்கு இங்கே நிறைய முதலீடுகள் வரப்போகின்றன. அதை நாங்கள் சிறந்தமுறையில் பயன் படுத்துவோமாயின், எங்களுடைய ஆட்களையே மேலும் படிக்க வைக்க வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும். தொழில்வாய்ப் புகளை இங்கேயே வழங்கி, படித்த இளைஞர்களை இங்கேயே வைத்திருக்கவேண்டும். வெளிநாட்டுக்குப் போகவிடக் கூடாது, படிப்புக்கு ஏற்ப தொழில் வாய்ப்பை கொடுக்க வேண்டும். தொழில்வாய்ப்பை நாங்கள் வழங்குவோம் என்றால் இளைஞர்கள் வெளிநாட்டுக்குப் போகமாட்டார்கள். இதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றால் நுண்பொருளியல் வளரவேண்டும்.

பங்குச்சந்தையினை நாங்கள் இங்கே கொண்டு வருவதற் குக் காரணம், எங்கள் மக்களை நிதி முகாமைத்துவத்தில் ஈடுபடவைக்கவேண்டும் என்பதேயாகும். பொருளாதாரம் என்று நாங்கள் முதல் பொருளாதாரத்தை மேற்கொள்ள முடி யாது. திறந்த பொருளாதாரத்தினை மேற்கொள்ளவேண்டும். வெளிநாடுகளில் இருக்கின்ற திறந்த பொருளாதாரத் தோடு எங்களுடைய பொருளாதாரத்தை ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும்.

சூதாட்டம் மாதிரித்தான் இருக்கின்றது. எங்களுடைய பிரதேசத்திற்கு இது உதவாது என்றுதான் பலர் யோசிக் கின்றார்கள். ஆனால், இந்த நிலைமாறவேண்டும். யாழ்ப்பாணத் திற்கு ஒரு கிளை உருவாக்கப்பட இருக்கிறது. நடவடிக்கை யும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால், கல்வி தொடர்பான அபிவிருத்தி ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. முதலீடு தொடர்பான அபிவிருத்தி ஏற்படவாய்ப்பிருக்கிறது.

எங்களுடைய பொருளாதாரத்தை வளம்படுத்திக்கொள்ள எங்களிடம் உள்ள மனிதவளத்தை நாங்கள் பயன்படுத்தி, நாங்களும் பொருளாதாரரீதியில் வளர்ச்சியடையமுடியும். நிலைபெறுவதற்கு இன்னும் 50 வருடங்கள் தேவைப்படும். இப்பொழுது நாங்கள் ஆரம்பித்து வைத்தால் பிறகு வரு பவர்கள் நன்மை அடைவார்கள். அதனால்தான் நாங்கள் இதை மேற்கொண்டு வருகின்றோம். எங்களுக்கு வருமானம் குறைவாகத்தான் இருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருக்கின்ற யாழ்.மக்கள் இதில் ஈடுபட்டுக் கொண்டேதான் இருக்கின்றனர்.

இந்த மண்ணில் பிறந்தவர்கள்தான் வாங்குகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்து... ஏன் கொழும்பில் முதலீடு செய்கின்றார்கள். நெருக்கடி சூழ்ந்த கொழும்பில் முதலீடு கள் செய்வதை விட்டுவிட்டு இங்கேயே மேற்கொள்ளலாம்.

இன்றைய காலகட்டத்தில் - சிங்களவர் தமிழர்களைப் பயன்படுத்தி எப்படி முன்னேறி இருக்கின்றார்கள் பாருங்கள் என்று சொல்லி முடித்தார்.

நேர்காணல்:- செல்வா

## தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி |
|---|---|---|
| பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு - கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம். | 1) சிரேஸ்ட முகாமையாளர் | 1. பௌதீக, உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரி.<br>2. ஐந்து வருடங்களுக்குக் குறையாத துறைசார் அனுபவம்.<br>3. ஆய்வுகூட தொழில்நுட்பவியலில் செய்முறைகள் தொடர்பான மேலதிக அறிவு இருக்கவேண்டும். |
| | 2) திட்டமுகாமையாளர் | 1. பௌதீக விஞ்ஞானம் அல்லது எந்திரவியலில் பட்டம்.<br>2. விஞ்ஞானம் அல்லது எந்திரவியலில் மேற்பட்டம்.<br>3. குறித்த துறையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.<br>4. திட்டமுகாமைத்துவம், வியாபார நிர்வாகம் என்பவற்றிலுள்ள அனுபவம் மேலதிகத் தகமையாகக் கொள்ளப்படும். |
| | 3) தொழில்நுட்ப முகாமையாளர் மூன்று பதவி வெற்றிடங்கள்.<br>1. இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம். | 1. உயிரியல் அல்லது பௌதீக விஞ்ஞானப் பட்டத்தை, இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றிருத்தல்வேண்டும். |
| | 2. மூலப்பொருள் உற்பத்தி ஆய்வு கூடம். | 1. பௌதீக விஞ்ஞானம் அல்லது எந்திரவியலில் பட்டம். |
| | 3. வானியல் கைத்தொழில் ஆய்வு கூடம் | 1. பௌதீக விஞ்ஞானம் அல்லது எந்திரவியலில் பட்டம்.<br>2. விஞ்ஞானம், எந்திரவியல் துறைகளில் மேற்படடம்.<br>3. ஐந்துவருடங்களுக்குக் குறையாத துறைசார் அனுபவம்.. |
| விண்ணப்ப முடிவு திகதி | 10.02.2004 | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# பசுக்கன்றும், அதன் வளர்ச்சிநிலை பராமரிப்பும்...

பாற்பண்ணை நடாத்துவதில் கன்று பராமரித்தல் மிக முக்கியமான ஒரு செயலாகும். கன்று வளர்ப்பில் கூடிய பிரச்சினைகளும், இழப்புக்களும் முதலிரண்டு மாதங்களிலேயே அதிகளவில் காணப்படும். கன்று பிறக்கும்போது, சரியாக உதவி செய்வதிலும், கன்று வளரும் காலத்தில் ஆரோக்கியத்திலும் கூடியகவனம் செலுத்தப்படவேண்டும். ஆரோக்கியம் என்பதைக் கவனத்தில் எடுக்கும்போது, நோயை மாற்றுவதிலும், அது வராமல் தடுப்பதே சிறந்தது என்பதை நாம் கவனத்தில் கௌ்ளவேண்டும்.

**நல்ல கன்று வளர்ப்பின் நோக்கங்கள் பின்வருமாறு.**

*நல்ல உடலாரோக்கியமான, சுறுசுறுப்பான பசுவைப் பெறுதல்

*ஒரு நல்ல உடலமைப்பு கொண்ட பசுவை உற்பத்திசெய்தல்.

*கூடிய காலம் வாழும் ஒரு பசுவை உற்பத்திசெய்தல்.

*தனது முதல் கன்றைத் தனது 2- 21/2 வருட வயதில் உருவாக்கும் ஒரு பசுவை உற்பத்தி செய்தல்.

**சினைப்பசு**

கன்று வளர்த்தல் என்பது சிறந்த காளையைத் தெரிவுசெயது, பசுவை சினைப்படுத்துவதுடன் தொடங்குகிறது. உகந்த உணவூட்டல் தான் சரியான கன்று வளர்த்தலின் தொடக்கமாகும். ஒரு பசுவின் கர்ப்பகாலம் கிட்டத்தட்ட 280 நாட்களாகும். இது பசுவின் இனத்திலேயே தங்கியுள்ளது. கனறு ஈனும் என எதிர்பார்க்கும்நாளுக்கு 2 மாதங்கள் முன்னதாகப் பசுவை பால் வற்றச்செய்தல்வேண்டும். இந்த பால்வற்றல் காலத்தின் போது, கன்று குறிப்பிட்டளவு நிறையால் கூடுகின்றது. கன்று ஈனும் என எதிர்பார்க்கும் நாளுக்கு 4-2 கிழமைகள் முன்னதாக பசுவிற்கு கூடியளவு உணவு வழங்க வேண்டும்.

**பிறப்பு**

கன்று ஈனும் நேரம் நெருங்கும்போது, வாலின் தலைப் பகுதியையும், இடுப்பையும் சுற்றியுள்ள நார்கள் தளர்வடைவதோடு, தோலும் தளர்வடையும். யோனி (பெண்குறி) வீங்குவதுடன் சளி போன்ற பதார்த்தம் வெளிவருவது பொதுவானது. மடி விரைவாகப் பெரிதாவதுடன் மடி வீக்கம் ஏற்படலாம்.

கன்று ஈனுவதற்குச் சற்று முன்னர் கருப்பை சுருங்கத் தொடங்கும். இந்த நேரத்தில் பசு அமைதியற்று காணப்படுவது கூடிக் கொண்டேபோகும். கன்று கருப்பைக் கழுத்திற்கு எதிராக தள்ளப்படுவதால் இதைத் திறக்க வைக்கிறது. அத்துடன், இந்தநேரத்தில் கன்று, அதன் பிறக்கும் அமைப்பை நீட்டிய முழங்கால்களில் தலைதங்க, அதன் வயிற்றில் இருக்கும் நிலைக்கு வருகின்றது. வலிமையான சுருக்கங்கள் வயிற்றுத் தசையில் ஏற்படும். இதன் விளைவாக கன்று பிறப்புக்கால்வாயினூடாக ஒரு சில மணித்தியால நேரத்தில் வெளியே தள்ளப்படும். கன்றின் தலை பெண்குறிக்கு வெளியே வந்ததும் பின்நோக்கி வளையும். இது கன்றின் ஏனைய பகுதிகள் மிக இலகுவாக இருப்பதனூடாக வெளிவர உதவும். முன்னங்கால்கள் பெண்குறியில் தோன்றி ஒரு மணித்தியாலத்தில் கன்று பிறக்கும் என்பது ஒரு சாதாரணவிதியாகும். ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்களின் பின்னரும் கன்று பிறக்கவில்லையானால், சோதனை செய்யப்பட வேண்டியது அவசியம். கன்று சாதாரணமாகப் பிறக்கும் நிலையிலிருந்தால், அதன் முன்னங்கால்களுடன் கவனமாக இணைக்கப்பட்ட ஒரு கயிற்றினை இழுப்பதன் மூலம் சிறிது உதவி செய்யலாம். எப்போதும் பசுவுக்கு நேர் வெளியே இழுப்பதிலும் பார்க்க மடியை நோக்கி கீழ்ப்பக்கமாக இழுக்கவும்.

பசுமுனகும்போது, மட்டுமே இழுக்கவும். இதைக் கவனமாகச் செய்யவும். உதவி செய்வதற்கு முன்னர் உதவி செய்பவர் தனது கைகளையும், புயத்தையும் 'டெற்றோல்' பாவித்து தொற்று நீக்கஞ் செய்யவேண்டும். அதேபோல பசுவினது பெண்குறியையும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியையும் சுத்தம் செய்யவேண்டும். சில வேளைகளில் கன்றின் அசாதாரண நிலைகளாவன-

ஒரே ஒரு முன்கால் வெளித்தள்ளல், பின்னங்கால்கள் முதலில் தெரிதல், வால் முதலில் தெரிதல்.

பொதுவாக கன்று பெண்குறியினூடாக வந்த பின்னரே தொப்பிள் கொடி அறும். இந்த நேரத்தில் கன்று சுவாசிக்கத் தொடங்க வேண்டும். ஏனெனில் இதற்கு மேலும் அதற்கு தாயிலிருந்து ஒட்சிசனைப் பெறமுடியாது.

கன்று பிறந்த பின்னர் அது உயிருடன் இருப்பதற்கு ஒட்சிசனே முதலில் தேவை. மூக்குத்துவாரங்களில் சளிபோன்ற திரவங்களோ மென்சவ்வுகளோ இல்லாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

காற்றை மூக்கினுள் ஊதுவதனாலோ அல்லது மூக்குக் குழியை ஒரு வைக்கோல் கொண்டு உரசி கூச்சமூட்டுவதனாலேயோ சுவாசத்தை ஊக்கப்படுத்தலாம்.

இது அந்த கன்றைத் தும்ம வைப்பதால் மூக்குத்துவாரங்கள் சுத்தமடைகின்றன.

**புதிதாகப் பிறந்த கன்றினைப் பராமரித்தல்**

கன்று பிறந்தவுடன் தொப்பூள் கொடியை அயடீன் கரைசலால் தொற்றுநீக்க வேண்டும். இதனை 24 மணத்தியாலங்களின் பின்னர் மீண்டும் செய்ய வேண்டும்.

கன்றுக் குட்டிகள் 12-24 மணித்தியாலங்களிற்கு அவற்றின் தாய்ப் பசுவுடன் வைத்திருந்து பால் குடிக்க விடலாம்.

*கன்றுகளுக்கு பொதுவாகப் பாவிக்கப்படும் உணவுப் பொருட்கள்-*

**கடும்புப் பால் (சீம்பால்)**

கன்று பிறந்த முதல் நாட்களின் போது பசுவினால் உற்பத்தி செய்யப்படும் பால் இதுவாகும். கன்று பிறக்கும்போது, அது நோயேற்படுத்தும் கிருமிகளுக்கு எதிரான தடுப்புச் சக்தியை ஏற்படுத்தியிருக்காது. கடும்புப்பால் கொடுப்பதனால் கன்றுக்கு அதன் குடலின் சுவரை நேரடியாக கடந்து இரத்தோட்டத்தில் சேரும் ஒரு புரதம் தரப்படுகிறது. (இவை உடைக்கப்படமாட்டா) இது கன்று பிறந்து 36 மணித்தியாலங்கள் (குறிப்பாக பிறந்ததிலிருந்து 12 மணித்தியாலங்கள்) மட்டுமே நடைபெறும்.

இந்தப் புரதங்கள் நோயுண்டாக்கும் நுண்ணுயிர்களின் எதிர்ப்பு சக்தியை கன்றிற்கு கொடுக்கின்றன. அத்துடன் இலகுவாக சமிபாடடையும் உணவுப் பொருட்களையும், கனியுப்புகளையும் கடும்புப்பால் கொண்டுள்ளது.

கன்று பிறந்த பின்னர் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக முதற்தடவை கடும்புப் பாலை உணவாக ஊட்ட வேண்டும். கன்று ஒரு நாளைக்கு பல தடவைகள் (4-5 நாட்கள்) கடும்புப் பாலை பெறவேண்டும் வேலையாட்களை கவனத்தில் கொள்ளும்போது, இதை செய்வது கடினமாக இருக்கலாம். இதைத் தவிர்ப்பதற்காக கடும்புப்பாலை ஒரு பாலூட்டும் வாளி (காம்பு - வாளி) யில் எடுத்து அதை கன்றின் தனியறையில் 70 CM அளவு உயரத்தில் வைக்கவும். கன்று அது விரும்பிய நேரங்களில் எல்லாம் குடிக்கக்கூடியதாக (முதல் தடவை) வாளியிலுள்ள காம்பைக் கண்டுபிடிக்க கன்றிற்கு உதவுவது நல்லது. கடும்புப்பால் குளிராவதால் பிரச்சினை எதுவும் இல்லை. ஒரு நாளைக்கு 2 தடவைகள் கடும்புப் பாலை அந்த வாளியில் வைப்பதுடன் ஒவ்வொரு தடவையும் உணவூட்ட முன்னர் வாளியை நன்கு சுத்தம் செய்யவும்.

இந்த முறைக்குக் குறைந்த வேலையாள் செலவாகுவதுடன், கூடியளவு கடும்புப்பால் உள்ளெடுப்பதை உறுதிசெய்கிறது. இது கன்றைத் திடமாக வளரச் செய்வதுடன் கன்றின் உடல் ஆரோக்கியத்திலும் ஒரு நேரான விளைவைக் கொண்டிருக்கும். அநேகமான கன்றுகள் ஒரு நாளைக்கு 4-6 கிலோகிராம் கடும்புப்பாலை உட்கொள்ளும்.

கடும்புப் பாலை, சாதாரண பாலுடன் கலந்து கொடுக்கக்கூடாது. அத்துடன், சற்றுநேரம் வைத்துவிட்டு ஒருபோதும் சூடாக்கக்கூடாது. கடும்புப்பால் காலம் சாதாரணமாக 3 நாட்கள் நீடிக்கும். அதன் பின்னர் ஒரு சீரான பாலை (பதிலுணவாக) மாற்றம் செய்யத் தொடங்கலாம். ஒவ்வொரு நாளும் கடும்புப்பாலின் அளவைக் குறைத்துக் கூட்டிக் கொண்டு போகுமளவில் பாலை கலக்கலாம். ஆனால், பால் பதிலுணவாக மாற்றம் செய்வதைக் கன்று பிறந்த 2 கிழமைகளுக்குத் தாமதம் செய்யலாம். கன்றுக்குப் போதியளவு கடும்புப்பால் ஊட்டும் மற்றொரு முறையானது - கன்றைப் பசுவுடன் 1-3 நாட்களுக்கு விடுவதாகும். மேலும் இந்தக் காலத்தின்போது, பால் உற்பத்தியை தூண்டவும், கூடியளவு கடும்புப்பாலை அகற்றவும் பசுவில் இருந்து எடுக்கப்படவேண்டும்.

**கொழுப்பு அகற்றிய பால்**

அநேகமான கொழுப்பு அகற்றப்பட்டபால் கன்றுக்கு உகந்த, பொதுவாக மலிவான உணவுப் பொருளாகும்.

**மோர்**

இது பாற்கட்டி உற்பத்தியில் உள்ள உப விளைவுப் பொருள் கன்றுகளிற்கு மிகவும் நல்லது. இது கன்றுகள் குறைந்தது 5-6 கிழமைகள் வயதாகுமுன்னர் கொடுக்கக்கூடாது. (தொடரும்...)

# மாடுகள் சினைப் பிடிக்காமைக்கான காரணங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கன்று ஈன்றபின், மாடுகள் 30 - 40 நாட்களுக்குள் பருவத்திற்கு வந்துவிடுகின்றன. ஆனாலும், 60 நாட்களுக்கு பின்வரும் சினைத் தருணத்தில்தான் கருவூட்டல் செய்யவேண்டும். 60 நாட்களுக்குள் கருவூட்டல் செய்தால், கருப்பையிலுள்ள கிருமிகள் பெருகி மாடுகள் சினைப்பிடிக்காமல் போக வாய்ப்புள்ளது.

**பாரம்பரிய குறைபாடு**

பரம்பரை மற்றும் பிறவிக் குறைபாடுகளால் மாடுகள் கருத்தரிக்காமல் போகநேரிடுகிறது. வெளிப்புற இன உறுப்புக்கள், கர்ப்பப்பை வாய்க்கும் இடையே அடைப்பு இருந்தாலும் மாடுகள் சினைப்பிடிப்பதில்லை. இந்தக் குறைகள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் இவற்றைப் பண்ணையிலிருந்து நீக்கிவிடுதலே சாலச்சிறந்தது.



விந்தணு, சினைமுட்டை ஆகியவற்றில் அழிவுக்குணங்கள், ஒட்டிய குரோமோசோம்கள் (Lethal genes) இருந்தால், கருவுறுதல் பாதிக்கப்படும் அல்லது ஒரு வளர்ச்சியடையாதவாறு இளங்கருவை அழித்துவிடும். வயது அதிகமான கறவை மாடுகள், காளைகள் சில சமயங்களில் முறையே குறைபாடுள்ள சினைமுட்டை மற்றும் விந்தினை உருவாக்குகின்றன. இதனால், வயதில் அதிகமான மாடுகள் சினை பிடிக்கத் தாமதப்படுகின்றது.

மாட்டின் ஒருமுட்டை உற்பத்திக்கும் சினைமுட்டை சூலகத்திலிருந்து வெளிப்படவும், சினைத்தருண அறிகுறியை நன்றாக வெளிப்படுத்தவும், சினைப் பாதுகாப்பிற்கும் பலவகையான ஓமோன்கள் குறிப்பட்ட அளவில் தேவைப்படுகின்றது. இவற்றில் ஏதேனும் ஒரு ஓமோன் சரியான விகிதத்தில் இல்லாவிட்டாலும், சினைப்பிடிக்காமல் போகின்றது.

மாடுகள் சினைப்பிடிக்கவில்லை என்றால், எத்தனை நாளைக்கு ஒருமுறை சினைத் தருணத்திற்கு வருகின்றது என்று கவனித்து சினை ஊசி போட்டபின், 21 நாட்களுக்குள் சினைத்தருண அறிகுறிகளை வெளியிட்டால் அது சினைப்பிடிக்கவில்லை என்றும் 25 - 30 நாட்களில் சினைத்தருண அறிகுறிகளை வெளியிட்டால் சினைப்பிடித்துப் பின் கருச்சிதைவு ஆகியிருக்கின்றதென்றும் அறிந்து கொள்ளலாம்.

*"பத்துப் பசுக்கள் எம் வீட்டிலுண்டு - நல்ல*
*பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை!*
*நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம் - இந்த*
*நீணிலத் தெம்மையொப் பாருமுண்டோ!"*

என்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் கூற்றுக்கிணங்க வேளாண்பெருங்குடி மக்களும் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டிருப்போரும் மேலே கூறப்பட்ட சினைப் பிடிக்காமைக்கான காரணங்களை மனதிற் கொண்டு, பண்ணைக்குத் தரமான மாடுகளைத் தேர்தெடுத்துக் காலம் தவறாமல் கருவூட்டல் செய்வதன் மூலம் மாடுகளைச் சினைப்பிடிக்கச் செய்து அதிக இலாபம் பெறலாம்.

**- தகவல் தொழில்நுட்ப மையம் -**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சங்கானை | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 50/= | 80/= | 50/= | 60/= | 70/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | 40/= | 40/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 50/= | 50/= | 60/= | 50/= | 60/= | 55/= | 60/= |
| கத்தரிக்காய் | 30/= | 50/= | 45/= | 30/= | 60/= | 40/= | 30/= |
| பாகற்காய் | 60/= | 50/= | 60/= | 30/= | 40/= | 60/= | 40/= |
| கரட் | 35/= | 30/= | 60/= | 30/= | 40/= | 40/= | 30/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 35/= | 30/= | 40/= | 40/= | 40/= |
| வெங்காயம் | 29/= | 25/= | 30/= | 30/= | 45= | 30/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 70/= | 60/= | 70/= | 60/= | 70/= | 40/= |

## சந்திப்புக்களம்

பூ.நகுலன்

# யாழ். மக்கள் பழையதை ஆராயும் அறிவும் புதியதைத் தேடும் ஆவலும் மிக்கவர்கள்



யாழ்ப்பாண மக்களுக்கு இந்த நூல்களை அன்பளிப்பதைப் பெரும்பேறாகக் கருதி மகிழ்கிறேன். ஏனெனில், யாழ்ப்பாண மக்கள் பழமையான விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதில் ஆர்வமுள்ளவர்கள். புதிய விடயங்களைக் கற்கவேண்டுமெனும் உணர்வுடையவர்கள். ஆனால், இந்திய இளைஞர்களோ சினிமா மோகத்திலும், தொலைக்காட்சி மோகத்திலும் மூழ்கிக் கிடக்கிறார்கள். நல்ல நூல்களைப் படிக்கவேண்டுமெனும் ஆர்வத்தை இழந்து வருகிறார்கள்.

எனது இந்த நூல்கள் - இந்தியாவில் இருப்பது பயனற்றது. யாழ்ப்பாணத்தில் இருப்பதே பொருத்தமானது



நா.ப.இராமசுவாமி

சிங்கள மக்கள் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்ததன் விளைவே, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமாகும். ஜனநாயக நாட்டில் அனைவரும் சம உரிமை பெற்று வாழவேண்டும். மலையகத் தமிழர்களின் உழைப்பிற்கு நன்றிக்கடன்பட்டவர்களாகச் சிங்களதேசம் என்றும் இருக்கவேண்டும்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படாவிட்டால், தமிழீழம் நிச்சயமாக மலரும் என்பதே எனது கருத்தாகும் என உணர்ச்சி ததும்பக் கூறுபவர் - ஒரு அரசியல்வாதியோ அல்லது கற்றுத் தேறிய அறிஞரோ அல்ல. அவர் ஒரு சாதாரண மனிதர்.

ஆனால், வீடு முழுவதையும் நல்ல, பெறுமதியான நூல்களால் நிரப்பிவைத்திருப்பவர். இவர் இந்தியாவின் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர்தான் நா.ப.இராமசுவாமி.

ஆயிரத்து எண்ணூறுகளிலே வெளிவந்த- மிகப்பெரிய நூலகங்களில் இல்லாத நூல்கள் கூட, இவரிடம் உள்ளன. முத்திரை சேகரிப்பதுபோல நூல்களைச் சேகரிப்பதே இவரது பொழுதுபோக்கு.

இதில் இன்னுமொரு மகிழ்ச்சியான விடயம் - இவர் தன்னிடமுள்ள பெறுமதிவாய்ந்த முப்பதினாயிரம் நூல்களை யாழ். பொது நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளார். இத்தகைய அற்புதமான மனிதரை ஒரு அந்தி சாயும் மாலைப்பொழுதிலே யாழ். பல்கலைக் கழகத்திலே சந்தித்தோம்.

எம்மை அறிமுகப்படுத்தியவுடன் உற்சாகமாக பேசத்தொடங்கினார். நான் இலங்கைக்கு வரவேண்டும் என நினைத்து வரவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும், இங்குள்ள நிலைமைகளை நேரில் அறிய வேண்டுமென நிறையவே என்னிடம் ஆசைகள் இருந்தன. எதிர்பாராத வகையிலே சிங்கப்பூருக்குச் சென்று, திரும்பும் வழியிலே பத்து நாள இடைவெளியில் யாழ்ப்பாணம் வந்தேன்.

யாழ்ப்பாணத்திலே பல இடங்களுக்குச் சென்றேன். பொது நூலகத்தைப் பார்த்த போது, மிகவும் வேதனையாக இருந்தது. உலகிலேயே அரிய தமிழ் நூல்கள் பலவற்றைக் கொண்ட நூலகம் - யாழ். பொதுநூலகம் என அறிந்திருந்தேன்.

அதனைத் தீயிட்டுக் கொழுத்தியவர்கள், புத்தகங்களின் வ்பரப் பட்டியலையும்,நெருப்பில் போட்டதாக அறிந்து மனம் வெதும்பினேன். தமிழ்மொழியை அழிக்க வேண்டுமென்பதே நூலகம் அழிக்கப்பட்டதன் நோக்கம். நூலகம் எரிந்ததன் தாக்கமே என்னிடமுள்ள நூல்களை அன்பளிப்புச் செய்யவேண்டுமெனும் அவாவை என்னிடம் தூண்டியது.

யாழ்ப்பாண மக்களுக்கு இந்த நூல்களை அன்பளிப்பதைப் பெரும்பேறாகக் கருதி மகிழ்கிறேன். ஏனெனில், யாழ்ப்பாண மக்கள் பழமையான விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதில் ஆர்வமுள்ளவர்கள். புதிய விடயங்களைக் கற்கவேண்டுமெனும் உணர்வுடையவர்கள்.

ஆனால், இந்திய இளைஞர்களோ சினிமா மோகத்திலும், தொலைக்காட்சி மோகத்திலும் மூழ்கிக் கிடக்கிறார்கள். நல்ல நூல்களைப் படிக்கவேண்டுமெனும் ஆர்வத்தை இழந்து வருகிறார்கள்.

எனவே, எனது இந்த நூல்கள் - இந்தியாவில் இருப்பது பயனற்றது. யாழ்ப்பாணத்தில் இருப்பதே பொருத்தமானது என்று பேசிக்கொண்டவரிடம், எப்போது இந்த நூல்களை வழங்குவீர்கள் எனக்கேட்டோம்.

யாழ்ப்பாணத்தில் இன்னமும் சரியானதொரு சூழ்நிலை உருவாகவில்லை. தற்போதுள்ள சூழ்நிலையில் எனது நூல்களை இங்கு கொடுத்தால், அந்த நூல்களுக்கு ஏற்படப் போகும் நிலைமைகளை உணர்ந்துதான், அவற்றை வழங்காமல் உள்ளேன். சரியான வேளையில் உரியவர்களிடம் இவற்றை வழங்குவேன்.

பிரபாகரனுடைய ஈழநாட்டின் ஆட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். தற்பொழுது வன்னிக்குச் சென்று நேரில் பார்த்தேன். அவருடைய நாட்டிற்கென சில கல்விமுறைமைகளைக்கூட அவர் உருவாக்கியுள்ளார்.

அறிவியல், அரசியல் நூல்களை தமிழாக்கம் செய்துள்ளார். இங்கு ஆபாசமான நூல்கள் வருவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கேள்விப்பட்டபோது மனம் நெகிழ்ந்துபோனேன். எனது நூல்களை வழங்குவதற்குச் சரியான இடம் யாழ்ப்பாணம்தான் எனத் தீர்மானித்தேன் என உணர்வுபொங்கப் பேசினார்.

அவரை மீண்டும் பழைய நினைவுகளுக்கு அழைத்துச் செல்வதுபோல, எத்தகைய நூல்களைச் சேகரித்து வைத்துள்ளீர்கள்? எவ்வாறு இந்த நூல்களைச் சேகரித்தீர்கள் என வினாவினோம்.

நான் விவசாயப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்தி வருகின்றேன். வயிற்றுப் பிழைப்புக்காக ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய வேண்டுமென்பதற்காகவே அதனைச் செய்து வருகிறேன்.

பாடசாலையில் படிக்கின்ற காலத்திலேயே நல்ல நூல்களை வாசிப்பேன். நல்ல கருத்துக்களையும், சிந்தனைகளையும் நூல்கள்மூலமாகப் பெற்றுக்கொண்டேன். இந்த நல்ல விடயங்கள் எல்லோருக்கும் சென்றடைய வேண்டுமென விரும்பினேன். அதனால், நூல்களைப் பாதுகாக்க எண்ணி, அவைகளைக் காசுகொடுத்து வாங்கிச் சேகரித்தேன்.

வேலைவிடயமாக வெளியூர்களுக்குச் செலலும்போதும், திரும்பிவரும் போதும் நூல்களுடனேயே வருவேன். நூலொன்றை வாங்க வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டால், அதனை வாங்கும்வரை எனக்குத் தூக்கமே வராது. 'இந்தியத் தாய்நாடு' என்ற ஒரு புத்தகம் 1972 ஆம் அண்டு வெளிவந்தது. அதை வாங்குவதற்காக எனது ஊரிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள காரைக் குடிக்குச் சென்றேன். அதற்காக ஒரு நாளைச் செலவிடவேண்டியிருந்தது.

1834 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் அகராதிகள்கூட என்னிடமுள்ளன. முக்கிய சம்பவங்கள், விடயங்கள் கூறும் பல வரலாற்று நூல்கள்கூட என்னிடமுண்டு. என்னிடமுள்ள தமிழ அகராதியொன்று, நான்கு பாகமாக வெளிவந்தது. அது தமிழ் நாட்டிலே தற்போது எவரிடமும் இல்லை. அதனால், அதனை தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கழகத்தினரிடம் கையளித்துள்ளேன்.

தமிழகத்தில் உ.வே.சாமிநாதையர் தான் பல அரிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். ஆனால், இவர்தான் அச்சுப்பதிப்புத் துறையில் முன்னோடியானவர் என்று கூறுவதை ஏற்க முடியாது. யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சி.வை.தாமோதரம்பிள்ளை என்ற அறிஞரும் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். ஆனால், அவரைப்பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. இது வேதனையான விடயமாகும் என ஆதங்கப்பட்டார் இராமசுவாமி.

யாழ்ப்பாணத்தில் நிற்கும்போது, தங்கள் உணர்வுகள் எவ்வாறுள்ளன என வினவினோம். அதற்கு இராமசுவாமி யாழ்ப்பாண மக்களின் மனவுணர்வுகளை நேரடியாகச் சந்திக்க முடிந்தது. அவர்கள் மின்சார வசதி இல்லாத காலத்தில், தமது கல்வியைத் தொடர்ந்த நிலமைகளை அறிந்தேன். அப்போது அவர்கள் பயன்படுத்திய ஜாம்போத்தல் விளக்கையும் நேரில் பார்க்கக்கூடியதாகவிருந்தது.

யுத்தகாலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களை இந்த மக்கள் கூறும்போது, மிகவும் வேதனைப்பட்டேன். அப்போது சமாதானச் சூழல் தொடரவேண்டுமென கடவுளைப் பிரார்த்தித்தேன்.

தமிழ்நாட்டில் தற்போது ஜெயலலிதாவின் ஆட்சியிலே புலிகளைப் பற்றிப் பேசினாலே பொடாவில் தள்ளி விடுகிறார்கள். ஆனால், ஈழத்தமிழ் மக்களுக்கு உதவத் தடையில்லை. எனவே, எனது நூல்களை வழங்க அரசு அனுமதியளிக்கும் என எண்ணுகிறேன் எனக் கூறியவரிடம் -

தங்கள் நெஞ்சை நெருடும் விடயங்கள் ஏதேனும் உண்டா எனக் கேட்டோம். அப்போது மகாராடிஸ்ரா மாநில அரசு - அம்பேக்காரின் வரலாற்றை நூலாக்கி, மலிவு விலையில் மக்களுக்குக் கொடுத்துள்ளது. ஆனால், அவ்வாறு தமிழக அரசு எதனையும் செய்யவில்லை. பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் வரலாறுகளை நூல்களாக்க அரசு முன்வரவில்லை.

அண்மையில் 'தொல்காப்பியப் பூங்கா' எனும் நூலைக் கருணாநிதி வெளியிட்டார். அதனை அவரது தொண்டர்கள் பலரே வாங்கினார்கள். கருணாநிதி தமிழை இதன்மூலமாக விற்க முயல்கிறார்.

தமிழக அரசில் இருந்தோர் - சோதிட நூல்களையே மலிவுவிலையில் விற்றார்கள். அதனால், எதுவித பிரயோசனமும் இல்லையெனத் தெரிவித்தார்.

இந்தச் செவ்வியின்மூலம், எமது மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் எனக் கேட்டபோது - தமிழ் மக்கள், சிங்கள மக்கள் அனைவரும் போரைக் கைவிட்டு, இருவரும் இணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அப்போது இலங்கையைச் சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளைவிடச் சிறப்பாகக் கட்டியெழுப்பமுடியும்.

சிங்கள மக்கள் - தமிழ் மக்களின் உரிமைகளை மதிக்கவேண்டும். இல்லையெனில், தமிழீழம் மலருவதை எவராலும் தடுக்கமுடியாது எனத் தெரிவித்தார். பல்துறை அம்சமான ஒரு செவ்வியொன்றைப்பெற்ற திருப்தியோடு அலுவலகம் திரும்பினோம்.

## செய்திக்கட்டுரை

யதார்த்தன்

# கால்கோள் விழாக்காணுதல் பல்கலைக்கழகத்திலும் வேண்டும்

தற்பொழுது பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் நடவடிக்கைகள் நாடெங்குமுள்ள பாடசாலைகளிலும் நடைபெற்று வருகின்றன.

ஆண்டு ஒன்றுக்கும், ஆண்டு ஆறுக்குமே புதிய மாணவர்கள் முக்கியமாக அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். இதிலும் குறிப்பாக ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வானது, பாடசாலைகள் அனைத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த நிகழ்வுகளுக்கு கால்கோள் விழா எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கால்கோள் விழா - வெளியே இருந்து பார்க்கும்போது, செய்தியாகப்பட்டாலும், இந்த விழாவின் தேவைக்குள் பல உண்மைகளும், தத்துவங்களும் புதைந்து கிடக்கின்றன.

முன்பள்ளிக் கல்வியை முடித்துக்கொண்டு, ஆண்டு ஒன்றில் அடியெடுத்து வைப்பதற்காகப் பெரிய பாடசாலைகளுக்குச் செல்லும் சின்னஞ்சிறு மழலைகளை, அந்தப் பாடசாலையில் ஏற்கனவே கல்விகற்றுக் கொண்டிருக்கும் மூத்த மாணவர்கள் - அன்போடு வரவேற்று உபசரிக்கும் நிகழ்விற்குப் பெயர்தான் கால்கோள் விழா.

தற்பொழுது இந்த விழா அனைத்துப் பாடசாலைகளிலும் கொண்டாடப்படவேண்டுமென்பது, கல்வியமைச்சு - கல்வித் திணைக்கள அதிகாரிகளூடாக கல்லூரி அதிபர்களுக்கு விடுக்கும் உத்தரவாகும்.

இந்த விழாவைச் சிறப்புற நடாத்தி, வலயக் கல்விப் பணிமனைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்பது உத்தரவின் ஒரு படியாகும். இதற்கென அநேகமாக எல்லாப் பாடசாலைகளிலும் இந்த நிகழ்வு நடைபெற்று முடிந்துள்ளது.

தரம் ஆறுக்கு கல்லூரிகளில், பாடசாலைகளில் மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டாலும், அங்கு இவ்வாறானதொரு விழா கொணடாடப்படவில்லை. கொண்டாடவேண்டிய அவசியம் இல்லையென்றோ அல்லது போனால், அந்த விழாவை - நேரத்தையும், பணத்தையும் செலவழித்துக் கொண்டாடியும் உரிய பலன் கிடைக்காமல் போய்விடுமோ என்ற சிந்தனையோ, இந்த விழாவை உயர் பாடசாலைகளில் கொண்டாடாமல் விட்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

சிறு பிள்ளைகள் கல்விகற்கும் ஆரம்பப் பாடசாலைகளில், இந்த விழாவை நடாத்துவதன்மூலமாக - அந்தப் பிஞ்சு உள்ளங்களின் அடிமனதிலே ஏதோ ஒரு விடயத்தை ஆழப் பதிக்க முயற்சிக்கிறது எமது கல்வியுலகம். அவர்கள் விதைக்க எண்ணும் விதை நஞ்சற்ற குழந்தையின் உள்ளமெனும் நிலத்திலே, ஆழ வேரூன்றி, அகல நிழல்பரப்புமாக இருந்தால், நிச்சயமாக இன்னுமோர் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பின் - பண்பட்ட சமுதாயத்தை எம்மால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

அதாவது, தாம் கல்விகற்கும் கல்விக் கூடங்களுக்குப் புதிதாக அனுமதி பெற்றுவரும் மாணவர்களை, எவ்வாறு வரவேற்கவேண்டும். அவர்கள் அச்சமடையாது, சகஜமாகப் பழகி, கல்விமீது அதிக ஈடுபாடு காட்டத்தக்க வகையிலே எவ்வாறு அவர்களை உற்சாகப்படுத்துவது என அந்தச் சமூகம் நன்கு தெரிந்து கொள்ளும் என நம்புகிறோம்.

இந்த மாணவர்கள் - பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்று வரும்போது, அங்கேயும் இவ்வாறே நடந்துகொள்வார்களாக இருந்தால், பகிடிவதைகள் என்பதே இல்லாதுபோகும். பகிடிவதையென்பதின் அர்த்தம் தற்போது தவறுதலாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகிறது.

சிரேஷ்ட மாணவர்கள் - புதுமுக மாணவர்களை வதைப்பது, புதுமுக மாணவர்களுக்குப் பகிடியாக இருக்கவேண்டும். ஆனால், பகிடியாக சிரேஷ்ட மாணவர்கள் செய்வது, புதுமுக மாணவர்களுக்கு வதையாக இருக்கிறது. இன்று இந்த நிலைமை கால்கோள் விழாக்களின்மூலமாக நாளை மாறும் என நம்புவோமாக.

ஆனால், அரிவரிவகுப்பில் அ...ம்...மா... அம்மா எனச் சொல்லிக்கொடுக்க, பின் மம்மி எனும் எமது இளைய தலைமுறை - கால்கோள் விழாக்களைக் காலுக்குள் போட்டு மிதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எமது எதிர்பார்ப்பு எதுவெனில், எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களிலும் கால்கோள் விழாக்கள் நடாத்தப்படவேண்டும். அதன்மூலமாகப் பண்பட்ட ஒரு சமூக விழுமியம் புதிதாக மலரவேண்டும். பகிடிவதையெனும் துன்பியல் கலாசாரம் மறையவேண்டும் என்பதிலும் பார்க்க, மாறவேண்டும் என்பதே இன்று அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

பகிடிவதையைக் காரணமாக வைத்து, புதிய மாணவர்களை அடக்க முனையாது, அன்பாக நடந்து மரியாதையை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே எமது கருத்துமட்டுமல்ல, அறிஞர்களுடைய வாக்குமாகும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

திருக்குறள்

# நமது நோக்கு

## இரட்டைமுகம் காட்டும் அரசும், நாடுகளும்...

இலங்கையில் அரசியல் நெருக்கடிநிலை குறித்து கவலைப்படும், அதுவும் ஆழ்ந்த கவலைப்படும் நாடுகளும், நபர்களும் அநேகம்.

சிங்களப் பேரினவாத அரசுகள் - தமிழ் சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஒரு கொடிய யுத்தத்தை, அதுவும் இன அழிப்பு யுத்தத்தை - காட்டுமிராண்டித்தனமாக நடத்திய போது, அதற்கு ஆயுத மற்றும் இராணுவரீதியிலான உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய சில நாடுகள்கூட, போரில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் மடிந்து, பல்லாயிரக் கணக்கில் காயப்பட்டபோது காட்டாத கவலையை, கொழும்பில் அரசியல் குழப்பம் ஏற்பட்டதும் தெரிவிக்க வந்துள்ளது விநோதம்தான்.

இரு தசாப்தகால யுத்தம் - தமிழ் மக்களுக்கும், மண்ணுக்கும் ஏற்படுத்திய பேரழிவுகள் எழுத்தில் வடிக்க முடியாதவை. இந்த யுத்தத்தை, தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தத்தை, இருபதாண்டுகாலம் தொடர்ந்து மேற்கொள்ள இலங்கைக்கு ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கை என்றபேரிலும், பரஸ்பர பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பட்டியலின்கீழும் உதவிய நாடுகள் - இன்று திடீரென சமாதானத்தை வலியுறுத்துவதும், அதற்காகப் பலகோடி டொலர்களைத் தானமாக இலங்கைக்கு வழங்கமுன்வருவதும் முரண்நகையான விடயமாகும்.

இப்போது அவர்கள் வலியுறுத்தும் சமாதானத்திற்கான அழுத்தத்தை அப்போதே... அதாவது இரு தசாப்தங்களுக்கு முன்பே - சிங்கள ஆட்சியாளர்கள்மீது மேற்கொண்டிருப்பார்களேயானால், ஒருவேளை இன்றைய இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தோன்றியிருக்க வாய்ப்போ, அதற்காக இவர்கள் ஆழ்ந்த கவலைப்படுவதற்கான கட்டாயமோ ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்கள் இத்தனை இழப்புக்களையும், அவலங்களையும், இடர்களையும் சந்தித்திருக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது.

இருபதாண்டுக்கும் அதிகமான காலம் - தமிழ் மக்களின் இரத்தத்திலேயே அரசியல் நீச்சலடித்த பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைமைகளின் இனவெறி - இப்போது தமிழ் மக்களின் வீரம்செறிந்த, தியாகங்கள் மிக்க போராட்டத்தின்மூலம் அடக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அது முற்றாக அடங்கிவிடவில்லை என்பதே உண்மை.

அதேபோன்று, சமாதானத்தை வலியுறுத்தும் நாடுகளில் வலிமைமிகுந்த சிலநாடுகள் - இன்னமும் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடும் கைங்கரியத்தையே செய்து வருகிறார்கள் என்பதும் மறைக்கமுடியாத உண்மையாகும்.

ஒருபுறம் சமாதானத்தை வலியுறுத்தியபடியே, மறுபுறம் அரசபடைகளுக்கு இராணுவரீதியிலான பயிற்சிகளையும், ஆயுத உதவிகள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் ஆகியவற்றையும் வழங்கி வருவதுடன், ஒருசில நாடுகள் - இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் என்றபேரில் உடன்படிக்கைகளையும் மேற்கொள்ளத் தீவிரம் காட்டியும் வருகின்றன.

இது மீண்டும் தமிழ்மக்கள் மீது இலங்கை அரசும் அதன பாதுகாப்பு படைகளும் போர்முனைப்புடன் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ள வழிவகுக்கும் என்பதே மெய்யாகும்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல், சிங்கள இனவாத அரசுகளின் இனவெறியுடன் கூடிய போர்வெறி அடங்கியிருக்கிறதேயொழிய, அழிந்துவிடவில்லை என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

இப்போது ஏற்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.ப கூட்டணியில் இனவாதிகளின் கூட்டணி என்றோ, சமாதானத்திற்கு எதிரான கூட்டணி என்றோ கூறுவதில் தப்பில்லை. இவர்களின் கடந்தகால நடவடிக்கைகளை மட்டுமல்ல, சமகால நடவடிக்கைகளும் கூட அதனைத் நிரூபிப்பதாகவே உள்ளன. நாட்டில் அரசியல்நெருக்கடி முற்றி, சமாதான முன்னெடுப்புக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், தேசத்தின் எதிர்காலம் குறித்த அக்கறை ஏதுமின்றி, அரசியல் குழப்பத்திற்குத் தீர்வுகாணும் ஆர்வமுனைப்பின்றி, அயலகத்துடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதில் மட்டும் தீவிரம் காட்டிவரும் ஜனாதிபதியின் உள்நோக்கம் தெளிவானதாகும்.

அதாவது, அவர் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதலும், தனது அரசியல் எதிர்காலத்தை உறுதிசெய்து கொளவதிலும் மட்டுமே அக்கறை கொண்டவராக இருப்பதால்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டணி அமைக்க துணிந்திருக்கிறார் எனலாம்.

இருப்பினும் இன்னொரு புறம் அவர் விடுதலைப் புலிகளுடன் பேசத்தான்தயார் என்று கூறிவருவதுதான் வேடிக்கையாகவுள்ளது.

சமாதானத்திற்கெதிரான உள்ளக, வெளியக சக்திகளுடன் வெளிப்படையாகவே தொடர்பு வைத்துக்கொண்டே அவர் இப்படிக் கூறுவதற்கு என்னதான் அர்த்தம்.

இப்படிக் கூறுவதன் மூலம் அவர் தமிழ்மக்களை ஏமாற்ற முயல்கிறாரா? சர்வதேச சமாதான ஆர்வலர்களை ஏமாற்ற நினைக்கிறாரா? தன் கூட்டாளிகளை பேய்க்காட்ட நினைக்கிறாரா? நாட்டுமக்களை ஏமாற்றத் துணிந்துள்ளாரா? என்பதே இப்போதுள்ள கேள்வி.

எந்த வகையிலும் அவர் இறுதியில் தன்னைத்தானே ஏமாற்றும் ஒருவராக இருக்கப்போகிறார் என்பது தான் உண்மை.

ஒருபுறம் இலங்கையின் ஆட்சிப்பீடத்தவர், மறுபுறம் சமாதானத்தை வலியுறுத்திக்கொண்டே இலங்கைக்கு இராணுவரீதியில் உதவிசெய்து பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்ள துடிக்கும் நாடுகளென அனைவருமே தமிழ்மக்களை ஏமாளிகளாக்க நினைக்கிறார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

## நாடும் நடப்பும்




# தமிழக அகதிமுகாமிலுள்ளோர் இம்மாதம் அனுப்பப்படவுள்ளனர்

(மன்னார்)

தமிழகம் மண்டபம் அகதிமுகாமிலுள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை, பகுதி பகுதியாக இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை, தலைமன்னார், வங்காலை, அடம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 915 பேர்- இதுவரை மண்டபம் அகதிமுகாமில் தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒப்பமிட்ட விண்ணப்பமொன்றினை, மண்டபம் அகதிமுகாம் அமைந்துள்ள பிரதேச தாசில்தாருக்குக் கையளித்திருந்தனர். இந்த விண்ணப்பத்திற்குப் பின்னரே இவர்களை மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகின்றது.

இம்மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இவர்கள் பகுதி பகுதியாக மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல் - மண்டபம் அகதி முகாம் பொறுப்பதிகாரியால் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(201)

### உயர் பாதுகாப்பு வலய விவகாரம்

# யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் 1000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் 1000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக, மக்கள் மீளக் குடியமரமுடியாதநிலை, தமது வீடுகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளமை, வீடுகளுக்கு வாடகை கொடுக்கப்படாமை, இதுவரை தமது வீடுகளுக்குச் சென்று பார்வையிட முடியாதநிலை, சுதந்திரமாகப் பாடசாலைகளுக்கு மாணவர்-பெற்றோர் செல்லமுடியாமை தொடர்பாக - யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலய விடயம் தொடர்பாக, சிறந்த முடிவுகள் எவையும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

தற்போதும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் - தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமைக்குக் காரணம், அவர்களின் வீடுகள் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருக்கின்றன.

இதனால், சமாதானச் சூழல் ஏற்பட்டும் - தற்காலிக இடங்களிலும், அகதி முகாம்களிலும் மக்கள் தங்கியிருந்து அல்லற்படுவதாகவும் மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

# மன்னாரில் வீதிவாரம் சிறப்பாக நடைபெறுகிறது

மன்னாரில் வீதிவாரம் வெகுசிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த வீதிவாரத்தை, மன்னார் உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.விஸ்வலிங்கம், வீதி அபிவிருத்திகள் திணைக்கள பொறியியலாளர் கே.குறூஸ் ஆகியோரது வழிகாட்டலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறையினரின் அனுசரணையுடனேயே இந்த வீதிவாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த வாரத்தின்போது, ஐம்பது கிலோமீற்றர் நீளமான பாதைகளை மக்களின் பாவனைக்கு ஏற்றவிதத்திலே செப்பனிடப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளதுடன், உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

(201)

# போக்குவரத்து திணைக்களத்தின் தேவைகளுக்கு வாகனம் இல்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள செயற்பாடுகளுக்கு இதுவரை எந்தவொரு மோட்டார் வாகனமும் வழங்கப்படவில்லை என, திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக, மோட்டார் திணைக்களம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கான அதிகாரிகளின் போக்குவரத்துக்களுக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடமாடும் சேவை மற்றும் மோட்டார் திணைக்களத்திற்கான பரீட்சைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் - பயணித்தல் முதலானவற்றுக்கு வாகன வசதியின்றி பெரும்சிரமப்பட வேண்டியநிலை தோன்றியுள்ளது.

இதனைவிட, மோட்டார் திணைக்களத்திலுள்ள ஆவணங்களைப் பதிவு செய்வதற்கென இதுவரையில் எந்தவொரு கணினி இயந்திரங்களும் வழங்கப்படவில்லை எனவும் -

கணினிகள் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்துதரப்படுமென - நீண்டகாலமாகவே உயர்மட்ட அலுவலர்கள் கூறிவருகின்றபோதிலும், இதுவரையில் அது வழங்கப்படவில்லை எனவும் அந்த அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ப)

### வறட்சியால் பாதிப்புற்ற

# நெற்செய்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது

கடும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட நெற்பயிர்ச் செய்கையாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட விவசாயத்துறை சார்ந்த அமைப்புகள் - அரச அதிபரூடாக மேற்கொண்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இம்முறை மழைவீழ்ச்சி இல்லாத காரணத்தினால், நெற்செய்கை பெரும் பாதிப்படைந்துள்ளது. இதனால், பரப்பாங்கண்டல், நீலாகணை, மணற்குளம், களிகட்டக்காடு, நொச்சிக்குளம், உயிலங்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்காகவே, இவர்களுக்குத் தற்போது இழப்பீடு வழங்கப்படவுள்ளது. விவசாயக் காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு மட்டுமே இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

செய்திக் கட்டுரை - பூஞ்சிட்டு -

# விளையாட்டுக்கள் வினையாகாமல் பார்ப்பது ஏற்பாட்டாளர்களின் முக்கிய பொறுப்பாகும்

விளையாட்டு வினையாகிவிடக்கூடாது. விளையாட்டு விளையாட்டாகவே இருக்கவேண்டும். இந்த வார்த்தை பொதுவாக்கிக்கொள்கின்ற வார்த்தை. இரு அணிகள் ஒரு போட்டியில் கலந்துகொண்டால் இரு அணிகளில் ஒன்று வெல்வதும் மற்றையது தோற்பதும் இயல்பானது. இந்த உணர்வு நிலையினை அடையாதபோது, அந்த உணர்வு சக்திக்கு அப்பாற்பட்டு எப்போதும் தமக்கே வெற்றி கிடைக்கவேண்டும் என்ற நிலையில் விளையாடி ஒரு அணி தோற்கின்றபோது, அவ்வாறு தோல்வியுற்ற அணி மிகவும் பலவீனமடைந்து கோபப்பட்டு விளையாடுவதும், போட்டி விதிகளை மறந்து வன்முறையில் இறங்குவதும் இயல்பான நிகழ்ச்சிகளாக மாறிவிட்டது.

போட்டி ஒன்றின்போது, ஒரு அணி இவ்வாறு வன்முறையில் இறங்குகின்ற சந்தர்ப்பத்தில் மற்றைய அணி கூறுகின்ற வார்த்தைகளாகவும் மேற்சொன்ன வார்த்தைகள் அமைந்துவிடுகின்றன.

இந்த வார்த்தைப் பிரயோகங்கள் சில சமயங்களில் அடிதடியிலும் நிறைவுபெறுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அண்மையில் அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் நிகழ்ந்துள்ளது.

விளையாட்டு விழா ஒன்று அண்மையில் நடைபெற்றது. அந்த விழாவில் பாரம்பரிய விளையாட்டுக்களை வளர்க்கின்றோம் என்ற பெயரில் சில விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. கிளித்தட்டு, கபடி, உறி அடித்தல் என்பவை அவையாகும். பாரம்பரிய விளையாட்டுக்களை வளர்க்கின்றோம் என்ற ரீதியில் நடத்தப்பட்ட இந்தப் போட்டி, வன்முறையை தூண்டுவதாகவே இறுதியில் அமைந்துவிட்டது.

ஒழுங்குசெய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகளினை நடத்தியோர் விசேட நிகழ்வு ஒன்றினை நடத்தியவர்கள். இவர்கள் போட்டியினை நடத்தியபோது, சரியான திட்டமிடல் ஒன்றினை செய்யாமை காரணமாக இந்த வன்முறைச் சம்பவம் இடம்பெற வாய்ப்பு உருவாகியிருக்கலாம் என்றுகூடப் பேசப்படுகின்றது.

ஒரு குறித்த பிரதேசத்தில் இந்த விளையாட்டுவிழா விசேட நிகழ்வொன்றின் அங்கமாக நடைபெற்றது. விளையாட்டுக்களில் கலந்துகொண்டவர்கள் அந்தப் பிரதேசத்து வீரர்களாக இருக்கவில்லை. அதனால், பார்வையாளர்களும் அதிகமில்லை. வேறு பிரதேசத்து இரு அணிகள் அழைத்து வரப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. விழா ஏற்பாட்டாளர்கள் விழாவை நடத்தி முடித்தால் சரி என்ற பெயரிலும், அந்த விழாவிற்கான ஏதேனும் ஒதுக்கீடுகளை (நிதிகளைப்) பெற்றுக்கொள்வதிலுமே ஆர்வத்தைக் காட்டியிருக்கலாம். அந்தளவிற்கு விளையாட்டுப் போட்டிகள் சரியான முறையில் 'திட்டமிடல்' இருக்கவில்லை.

கிளித்தட்டு விளையாட்டின்போது, ஒரு அணி மிகவும் பலமான ஒரு அணியாகவும், மற்றைய அணி மிகவும் பலம்குறைந்த அணியாகவும் அமைந்திருந்தது. விளையாட்டு ஆரம்பமாகி 10 நிமிடங்கள் நல்லதொரு போட்டியாக அமைந்திருந்தது. பின்னர் ஒரு அணியின் கை மேலோங்கிய சந்தர்ப்பத்தில் மற்றைய அணி தலைநிமிர்த்த முடியாமல் இருந்த நிலைக்குச் சென்றது.

கிளித்தட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற அணி மிகுந்த உற்சாகத்தை பெறும் வண்ணமும், தோல்வி அடைந்த அணி இனிமேல் கிளிதட்டையே திரும்பிப் பார்க்கமுடியாத படியும் போட்டி நடைபெற்றது.

போட்டி ஏற்பாட்டாளர்கள் காட்சிப் போட்டி என்ற அடிப்படையில் அணிகளைத் தெரிவு செய்தபோதும், உரிய கவனம் செலுத்தவில்லை. இதனால், இப்படியான ஒரு நிலை ஏற்பட்டது என்றே கூறலாம்.

கபடி விளையாட்டு ஆரம்பமானபோது, அந்தப் போட்டியை நேரில் பார்த்திராத ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அந்தப் போட்டியை பார்வையிட்டனர். விளையாடுகின்றார்களா - சண்டையிடுகின்றார்களா என்ற வகையில் விளையாட்டு அமைந்திருந்தது. உடைகள் எல்லாம் செம்பாட்டு மண்ணும் அதனோடு சேர்ந்து குருதியும் கலந்திருந்தன. விளையாட்டின்போது ஏற்பட்ட காயங்களில் இருந்து வடிந்த குருதியே அதுவாகும்.

இந்த கபடி என்ற பாரம்பரிய விளையாட்டு முறையை எமது முன்னோர் விளையாடியபோதும், இவ்வாறுதான் விளையாடியிருப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்கின்றபோது, இந்த விளையாட்டு மறைந்து போனமை நல்லதுதான் என்ற உணர்வே தோன்றுகின்றது.

மறைந்துபோகும் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடவேண்டும், அந்த விளையாட்டுக்களை அழிவிலிருந்து காக்கவேண்டும் என்ற காரணங்களுக்காக விழாவின் ஏற்பாட்டாளர்கள் இந்தப் போட்டியை நடத்த முன்னின்று இருக்கலாம் நல்ல முயற்சி. பாராட்டப்படவேண்டியது.

போட்டியின்போது தமிழர்களின் உடல் வலிமை, விளையாட்டின்போது கற்கவேண்டிய பொறுமை, சகிப்புத் தன்மை முதலியவற்றை இந்த விளையாட்டு வெளிப்படுத்தியிருந்தால் அது மிகவும் நன்றாக அமைந்திருக்கும். இவை இந்த விளையாட்டுப் போட்டியில் இடம்பெறாமல் போனதுதான் கவலைக்குரிய விடயமாகிவிட்டது.

வெற்றி, தோல்வியை கொடுத்தால் எங்கே சண்டையை ஆரம்பித்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் கபடிப்போட்டியின் முடிவு சமநிலையில் முடிந்துவிட்டது. சமநிலையில் இருந்தபோது போட்டி நேரம் முடிந்துவிட்டது.

இந்தப் போட்டி சமநிலையில் முடிந்துபோனமை அணி வீரர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை. போட்டி இடம்பெற்ற இடத்திற்கு வாகனத்தில் வந்தவர்கள் வாகனத்தில் திரும்பிச் சென்றார்கள்.

வாகனத்தில் செல்லும்போதே, இரு அணிகளும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே சென்றன. குறித்த ஒரு இடத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு வாய்த்தர்க்கம் கைகலப்பாகமாறி சண்டையாக உருவாகிவிட்டது. கலாசாரம்பேணும் குழுவினரின் தலையீட்டால் சண்டை சற்று ஓய்ந்து மனங்களில் புழுங்கிக்கொண்டு அவர்கள் தமது இடங்களுக்கு திரும்பியிருக்கின்றார்கள்.

இவ்வாறானவர்கள் தாம் விளையாடுவது விளையாட்டு என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் விளையாட்டில் இருந்து என்ன கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

அதாவது சேவல்கள் சண்டைபிடிக்கும் போது, உரிமையாளர்கள் கண்களுக்கு அகப்படாத இடத்தில் நின்று சண்டை பிடிப்பதைப் போல் குப்பை மேட்டில் சண்டை பிடிக்கும் சேவல்கள் சமாதானம் செய்துவைக்க - சண்டையை நிறுத்திவைக்க ஆளில்லாமல் சண்டை பிடித்து களைத்து, அழிந்துவிடுகின்ற தன்மை போல ஆகிவிடுவார்கள். கவனம் இந்த விடயத்தில் தேவையாயிருக்கின்றது.

விழா ஒன்றினை நடத்திவிட்டோம் என்ற பெருமிதத்தில் இருப்பவர்கள் - இருக்க வேண்டியவர்கள் - விழா நடத்துகின்றோம் என்று காட்ட முயன்றவர்கள் தமது செல்வாக்கை மக்களிடையே காட்ட நினைத்தமை போல விளையாட்டினால் தோன்றிய வன்முறையையும் தாமே பொறுப்பேற்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை உணர வேண்டும்.



விளையாட்டுப் போட்டிகளை பொறுப்பாக நின்று நடாத்துபவர்கள், போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பாக போட்டிகளின் விதிமுறைகள், விளையாட்டின் ஒழுங்குத் தன்மை என்பன தொடர்பாக போட்டியாளர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் அல்லது போனால், விளையாட்டு வினையாவதை யாராலும் தடுக்கமுடியாது.

விளையாட்டுப் போட்டிகள் முடிவுற்றதும் அதில் பங்குகொண்ட அணிகள் பிரிந்துநின்று மோதுவதும், அதனால் உடமைகளுக்கு மட்டுமல்லாது உயிர்களுக்கும் சேதமேற்படுவதும் எமது பாரம்பரியத்தின் வழிவந்த ஒரு அசிங்கமான செயற்பாடாகும். அந்த அசிங்கம் தொடர அனுமதிக்கக்கூடாது.

போட்டிகள் நடைபெறும்போது, பார்வையாளர்கள் மைதானத்திற்குள் இறங்கி, போட்டியாளர்களை தாக்குவதும் நடுவர்களைத் தாக்குவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். விளையாட்டை விளையாட்டாகவே பார்க்கும் மனநிலை அனைவர் மனதிலும் ஏற்பட வேண்டும் அல்லது விளையாட்டு வினையானால் வீண் தடயங்களை சுமக்கவேண்டிவரும்.

செய்திக் கட்டுரை - கனகரவி -

# இளைஞர்களே நல்ல பாதையில் நடவுங்கள்... எனும் பத்திகளை எழுதத் தூண்டாதீர்கள்...

**நா**ட்டில் பெரும் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்க... ஈழ விடுதலைப் போராட்டம் பெரும் விலைகொடுக்கப்பட்டு முக்கிய கட்டத்தில் இருக்கும்போது, இன்றைய இளையவர்கள் பொறுப்பற்று நடப்பது வேதனைக்குரியதொன்றாகவே தெரிகிறது.

வவுனியா மாவட்டத்தில் இளம் சமூகத்தின்போக்கு விரும்பத்தகாத செயலாகவே மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஏதாவதொரு திரைப்படத்தின் பெயரை ஊருக்கொரு அணிக்கு சூட்டிக்கொண்டு வீரதீரச் செயல்களில் இறங்கியுள்ளனர். முறைத்தாயா, எங்கள் பகுதிக்குள் மூச்சு விட்டாயா, நீயென்ன இவனா... அவனா... மிரட்டல், அடிதடி பின் வெட்டுக்குத்து இப்படி செய்யும் இளம் சமூகம் என்ன நினைத்து செயற்படுகின்றதோ? தங்களின் பிற்கால வாழ்வில் மண் அள்ளிப் போடுகின்றதென்பது மெய்யானதாகும். குடிவகைகளை அருந்தி முகங்களை கோரமாக சுமந்து சென்றவர்கள். போதையேற்றும் பொடிகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். நகரின் சில முக்கியமான பகுதிகளில் இதனை பாவிக்கும் இளையவர்கள் மாலை வேளையில் கூடி விடுகின்றனர் என்ற செய்திகள் வேதனைக்குரியவையாக செவிகளில் பட்டன. இப்படியான நரகத்துக்குள் புதைபடும் இளையவர்கள் யார்? இவர்கள் இப்படிச் செல்வதற்கு காரணம் என்ன? இதனை தடுக்கவே முடியாதா? இந்த இளையவர்கள் அநாதைகள் அல்ல... இவர்களுக்கும் பெற்றோர் உள்ளனர். இவர்கள் பொழுதை கழிக்கவென கூடுவதனால் அதற்குள் ஒருவர் தீய பழக்கவழக்கமுடையவரானாலும் அவரினால் ஏனையவரிற்கும் தொற்றுநோய் பரவுவதுபோல தொற்றிக் கொண்டதுவே காரணமாகின்றது. இதனை தடுக்கமுடியும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளில் அக்கறை காட்டுவதன் மூலமும், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பவர்கள் மூலமும் தடுக்கமுடியும்.

எந்தவொரு பெற்றோருக்கும் தமது பிள்ளைகள் தீய செயல்பாடுகளிற்குள் இறங்குவது விருப்பமுடையதல்ல. ஆனால்... பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகள் தவறு செய்தவரென சுட்டிக்காட்டுகின்றபோது, அதனை ஏற்றுக்கொள்வதில்லை. நியாயப்படுத்தவே விரும்புகின்றனர். இதற்கு சாதகமாக அவர்கள் பழமொழியொன்றை உதிரப்பார்கள். "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்று, தமது பிள்ளைகள் பற்றி அக்கறையுடைவர்கள் செய்யும் மிகப்பெரிய தவறாகவே இதனை கருதவேண்டியுள்ளது. தவறுகளை திருத்தப்பாருங்கள் அல்லது பென்சிலை திருடிவரும்போது கவனிக்காத தாயின் மூக்கை மகன் கடித்ததுபோலவும் நிலமை ஏற்படலாம். அதொரு கதை பென்சிலை திருடிவந்த மகனின் செயலை கண்டிக்காத தாய் திருட்டுச்செயலிற்கு துணைபோனவராவார். விளைவு மகன் பெரும் கொள்ளைகளில் ஈடுபட்டு பொலிஸாரால் பிடிக்கப்பட்டிருந்தபோது, மகனைப் பார்ப்பதற்கு தாய் போனபோது மகன் எட்டி தாயின் மூக்கை கடித்துவிட்டு, நான் சிறுவயதில் பென்சிலை திருடிவந்தபோது என்னை திருத்தியிருந்தால் எனக்கேன் இந்த நிலமை என்று கேட்டானாம். இது ஒரு படிப்பினையூட்டும் கதை பெற்றோரே பிள்ளைகளை திருத்துங்கள்.

வீதிகளில் சுற்றித்திரியும் ஏராளமான இளையவர்களின் கோலம் எரிச்சலூட்டுபவையாக காணப்படுகின்றன. இவர்களால் எப்படி இவ்வாறு திரியமுடிகின்றது. பெற்றோரால் என்பது ஒன்றும் மறைமுகமானதல்ல. மோட்டார் சைக்கிலும் கையடக்க தொலைபேசியும் பெருமபாலான இளையவர்களிடம் கூடவே பிறந்தவொன்றுபோல காணப்படுகின்றன... இதற்கு பெற்றோரே பணம் கொடுக்கின்றனர். தமது பிள்ளைகளை கௌரவமாக வைத்திருக்கின்றோம் என்ற நினைப்புடையவரே நீங்கள் பார்க்கும் கௌரவம்? இது போன்றவற்றிற்குள் இல்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளிற்கு என்ன தேவைக்காக மோட்டார் சைக்கிள், கையடக்க தொலைபேசி என்பதை கவனத்தில் எடுங்கள்: இன்றைய நவீன உலகில் பிள்ளைகளை அறிவியல் வளர்ச்சியுடைவர்களாக, ஆய்வுரீதியான கருவியை பெற்றுக் கொடுப்பதற்காக பெற்றோர் தூண்டுகோலாக இருக்கவேண்டும். இனிவரும் இளஞ சமூகம் இந்த மண்ணில் செய்யவேண்டியது ஏராளம். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப கற்கவேண்டும், உழைக்கவேண்டும் சிலருக்கு வெளிநாட்டுப் பணம் கையில் கிடைத்ததும் தலை கால் புரிவதில்லை. ஐரோப்பிய நாடுகளில் எங்கள் உறவுகளின் உழைப்பு உங்களுக்கு தெரியுமா? அநேகமானோர் 14, 16 மணிநேரம் கடும் உடல் உழைப்பைச் செய்யவேணடி உள்ளது. தம்மை பிழிந்து அனுப்பும் பணத்தை நாட்டில் உள்ள பலர் தண்ணீர்போல செலவு செய்கின்றனர். தொழில் எதுவும் செய்யாது சோம்பேறிகளாக இருக்கின்றனர். நல்ல பல செயல்களையும், உழைப்பையும் தவிர்த்து, வீண் பொழுது போக்குகின்றனர். தமது பிள்ளைகளையும் இலக்கில்லா வாழ்விற்குள் சிக்க வைக்கின்றனர்.

இளம் சமூகத்தின் இந்தப் போக்கு, சமூக விரோத செயல்களை கொண்டுவந்து சேர்ப்பதுடன் வாழ்வை தொலைப்பதாகவும் அமைகின்றது. பிள்ளைகளைச் சரியான முறையில் வழிநடத்தும்போது வாழ்வு வெற்றியாகிவிடும்.

வீதிகளில் அலைந்து திரியும் இளையவர்கள் பெண் பிள்ளைகளையும் விட்டுவைப்பதில்லை. தமது வீரவிளையாட்டுக்களை அவர்களை நோக்கியும் நகர்த்துகின்றனர். பெண் பிள்ளைகளை நோக்கி கேலியாக பேசுகின்றவர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களை செய்கின்றனர். இவர்களின் கேலிச் செயற்பாடுகளுக்கு தமிழக சினிமாப் பாடல்களும் துணைபோகின்றன. மிதிவண்டிகளில் இளம் பெண் பிள்ளைகள், இளைஞர்கள் பலரால் பின்தொடரப்பட்டு மிகக் கேவலமான வார்த்தைப் பிரயோகத்தால் அவலங்களை மனங்களில் சுமக்கின்றனர்.

இது ஏன்? மனிதர் இப்படியான செயலால் என்ன திருப்தியைக் காணப்போகின்றனர். உங்கள் குடும்பப் பெண்ணொருவர் இப்படி மன உழைச்சலுக்குள்ளானால் அதனை ஏற்றுக்கொள்வீர்களா? நீங்கள் இவ்வாறான தொல்லைகளை கொடுத்துவருகின்ற போதும், பெண்கள் சமூகத்தில் முன்னேறி வருகின்றனர். கடந்த உயர்தர பெறுபேற்றை பாருங்கள் பெண்கள் பாடசாலைகளே முன்னணி வகிக்கின்றன. இளைஞர்களே நீங்கள் புகைத்தல், குடி, போதைப் பொடியென்று மலத்தை தின்னும் சாக்கடைக்குள் புதைபடுகின்றீர்கள். இதனை நிறுத்துங்கள். மனித விழுமியங்களை பேணுங்கள் நிறைய வாசியுங்கள். உயர்ந்த உலக சமூகத்திற்குள் நீங்களும் சமமாக இருங்கள்.

(தொடரும்)

## ஈராக்கின் மத்திய பகுதியில்

# மேற்கு நாட்டவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின்மீது குண்டுத்தாக்குதல்

## நால்வர் பலி! 17 பேர் காயம்!!





பாக்தாத்தின் மத்திய பகுதியான கரடா மாவட்டத்தில் அமைந்துள்ள விடுதியொன்றில் நேற்று நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் மூன்று மாடிகளைக்கொண்ட விடுதியின் ஒருபகுதி சேதமடைந்துள்ளதாகவும், நான்கு பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாகவும், அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சகீன் என்றழைக்கப்படும் இந்த விடுதி முற்றாக எரிந்தநிலையில்- மூன்று கார்களும், சற்றுத் தூரத்தில் அரைவாசி எரிந்த நிலையில் வேறு ஒரு காரும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் மூவர் ஈராக்கியர்கள் எனவும், 17 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே இந்த விடுதியில் தங்கியிருந்த தொழில் மற்றும் சமூக சேவை அமைச்சரான சாமி இசரா - அல்மஜோர் என்ற பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது - காலைப்பிரார்த்தனைக்குத் தான் தயாராகிக்கொண்டிருந்தவேளை பலத்த சத்தத்துடன் கட்டடம் அதிர்வதை உணர்ந்ததாகவும், கட்டடம் முழுவதும் புகையினால் நிரப்பப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

பாதுகாவலரின் உதவியுடன் கட்டடத்திலிருந்து தான் வெளியேறியதாகவும், அதேநேரத்தில் பல வெளிநாட்டவர்கள் கட்டடத்தினுள் காணப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் கோழைகளான பயங்கரவாதிகள் எனவும், முன்னாள் ஈராக்கியத் தலைவர் சதாம் ஹுசைனைப் போன்று தான் ஒளிந்துகொள்ளப்போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார். இதனிடையே அந்த விடுதியில் பணிபுரிந்த ஊழியர்களும் விடுதியின சொந்தக்காரர்களும் தமக்கு பலமுறை வெளிநாட்டவரை வெளியேற்றுமாறு பயமுறுத்தியதாகவும் தெரிவித்தனர்.

வெளிநாட்டவர்களினால் பாவிக்கப்பட்ட ஐந்து விடுதிகள் - கார்க்குண்டு ரொக்கட் மற்றும் வேறுவிதமான வெடிபொருட்களினால் தாக்கப்பட்டுள்ளன.

## ஆப்கான் குண்டுவெடிப்பில் பிரிட்டிஷ் வீரர்கள் காயம்!



(காபுல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரில் - பிரித்தானிய படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தவேளையில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தனது வாகனத்தை படையினரின் ரோந்து வாகனத்துடன் மோதியதில் மூன்று பிரித்தானிய படையினர் காயமடைந்தனர். தாக்குதல்களுக்குள்ளான பிரதேசத்தில் இராணுவத் தளமொன்றும் அமைந்திருந்ததாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஒரேநேரத்தில் தாக்குதலுக்குள்ளான வண்டியும், சிதறிய கார்களும் அந்தப் பிரதேசத்தில் சிதறிக்கிடந்ததைக் கண்டதாக பி.பி.ஸியின் செய்தியாளர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்தத் தாக்குதல் - தற்கொலைக் குண்டுத் தாக்குதல் எனத் தெரிவிக்க அதிகாரிகள் மறுத்திருந்தபோதும், தற்கொலைத் தாக்குதலுக்கான ஆதாரங்கள் தென்பட்டுள்ளதாக பி.பி.ஸியின் அன்ரியூநோத் தெரிவித்தார். மேலும், இரண்டாவது வெடி விபத்தொன்று ஜேர்மன் இராணுவ முகாமிற்கு வெளியே நடைபெற்றுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பில் பல வெளிநாட்டவர்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக நோக்கு

## எண்ணெய் தாங்கியில் பற்றிய தீ அணைப்பதற்குப் பெரும் போராட்டம்

### அவுஸ்ரேலியாவில் சம்பவம்



அவுஸ்ரேலியாவில் வர்த்தக மையமென்றில் எண்ணைத்தாங்கி ஒன்று தீப்பற்றிக் கொண்டதாகவும், தீ அணைக்கும் படையினர் தீயை அணைப்பதற்காக போராடிவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணைத்தாங்கியில் 7 மில்லியன் லீற்றர் எதனோல் என்னும் இரசாயனப் பொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் அவுஸ்ரேலியாவின் தலைநகர் சிட்னியில் அமைந்துள்ள 'கெம்பிலா' என்ற துறைமுகத்தில் நிகழ்ந்துள்ளது.

மேலும், எண்ணைத்தாங்கி வெடித்த சத்தம் 16 மைல்வரை கேட்கக்கூடியதாக இருந்ததாக தொலைகாட்சிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. துறைமுக ஊழியர்கள் அகற்றப்பட்ட நிலையில், ஒருவர் சிறு காயத்துக்குட்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. வெடிவிபத்திற்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

## இணையத்தளக் குற்றங்களால் கைதாவோர் தொகை அதிகரிப்பு

### சர்வதேச மன்னிப்புச்சபை அறிவிப்பு



இணையத்தளம் தொடர்பான குற்றங்களினால கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் மிகவிரைவாக அதிகரித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. இதுவரை இந்தக் குற்றங்கள் தொடர்பாக 54 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கணனி வலையூடாக மின்னஞ்சல்களையும், தளங்களையும் உருவாக்கி ஜனநாயகத்துக்கு சார்பான செய்திகளைப் பரப்பியதாகவும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

மேலும், சீனாவில் சார்ஸ் வைரஸ் நோய் பரவிவருகிறது. என்ற செய்திகளை அனுப்பியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் பலர் சிறைச்சாலைகளில் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சீனாவில் கணனி வலையை உபயோகிப்பவாகளின் எண்ணிகை அதிகரித்து வருவதனால் பாவனையாளர்களிக் எண்ணிக்கையை குறைப்பதற்கு புதிய சட்டங்களை சீனா நிறைவேற்றி வருகிறது. உலக நாடுகளில் கணினி வலைக்கெதிரான தணிக்கையை சீனாவே அதிகம் செயற படுத்திவருகிறது. ஆயிரக்கணக்கான பிரத்தியேக பொலிஸார் - கணினி வலை தொடர்பான மையங்களை கண்காணித்துவருவதாக மன்னிப்புச்சபையின் 'லுயுசி விசெர்' தெரிவித்தார்.

## காஸாவில் நடந்த மோதலில் எட்டுப் பலஸ்தீனர்கள் பலி!



காஸா பிரதேசத்தை இஸ்ரேலிய படையினர் முற்றுகையிட்டபோது, 8 பலஸ்தீனர்கள் கொல்லப்படடார்கள். டாங்கிகள், ஜீப் வண்டிகள், புல்டோசர்கள் சகிதம் காஸா பிரதேசத்தில் அமைந்துள்ள "குசயிரோன்" என்ற நகரை முற்றுகையிட்டவேளையில் மோதல் ஆரம்பித்தது.

காஸாப் பிரதேசத்தில் அமைந்துள்ள யூதர்கள் குடியிருப்பான ரெற்சரிமில் தாக்குதல் ஒன்றைத் தொடர்வதற்கான ஆயத்தங்களை பலஸ்தீனர்கள் மேற்கொள்ளத் திட்டமிடுவதாகக் கிடைத்த தகவல்களின் பின்னர், இஸ்ரேலியப் படையினர் முற்றுகையை மேற்கொண்டதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

முற்றுகை நடைபெற்றவேளையில் பலஸ்தீனர்கள் டாங்கி எதிர்ப்பு எறிகணைகளையும், மோட்டார் குண்டுத்தாக்குதல்களையும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனப் பிரதமர் அகமட் குரேயும், இஸ்ரேலுக்கான அமரிக்க பிரதிநிதி ஜோன் பொல்ப் இற்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இம்மோதல் நடைபெற்றுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பாதை வரைபை மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக பி.பி.ஸியின் ஜேம்ஷ் ரெய்னோல்ட் தெரிவித்திருந்தார்.

இதனிடையே இஸ்லாமிய ஜிகாத் குழுவைச் சேர்ந்த ஐவர் இம் முற்றுகையில் கொல்லப்பட்டிருப்பதால் இஸ்ரேலிய படைக்கெதிராக தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டிருப்பதாக தெரிவித்தனர்.

பலஸ்தீன அதிகாரிகளிடம் இருந்து பலமான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையிடம் இவற்றை நிறுத்த உத்தரவிடுமாறு கேட்டுள்ளார்.



உலகின் பிரம்மாண்டமான சொகுசுக்கப்பல் இதுதான். பிரிட்டனைச் சேர்ந்த இதன் பெயர் 'குயின் மேரி'. ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 400 டன் எடை, 1132 அடி நீளம், 236 அடி உயரம். 135 அடி அகலம் கொண்ட கப்பல் இது. முதல் பயணமாக அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் உள்ள துறைமுகத்துக்குச் சென்று சேர்ந்து. துறைமுகத்தில் நுழையும்போது இரு படகுகள், தண்ணீர் பீய்ச்சி அடி கின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கடற்படையின் படகு மோதியதில் மீனவர்கள் இருவர் படுகாயம்!




"எத்தனை காலம் தான் ஏமாற்றுவர் இந்த நாட்டிலே... சொந்த நாட்டிலே... நம் நாட்டிலே..."

" என்ன மணியம் எம்.ஜி.ஆர் காலப் பாட் டோட வாறாய்...

இண்டைக்கென் கூடக்குறையப் பாவிச் சிட்டியோ...

"சும்மா விசர்க்கதை பேசாதை மணியம் விசயம் இல்லாமல் பாடமாட்டான் கனகு... எல்லோரும் எங்களை எங்கட மண்ணில வைச்சு ஏமாத்தப்பாக்கினம்...அதுதான் பாடினன் விளங்கிக் கொண்டாச் சரி..."

"எனக்கு விளங்கேல்ல... எல்லோரும் ஒவ்வொரு கருத்தை யோசிக்காம... நீ யோசிச்சதை செல்லன்..."

"இல்லை... இந்த இந்தியத் தூதுவர் நிருபம் சென் என்பவர் இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தால சமாதானத்திற்கு பாதிப்பு ஏற்படாதென்றும், தமிழர்களுக்கு ஆபத்தில்லையென்றும் கொழும்பில சொல்லியிருக்கிறார்... அதை நினைக்க இந்தப்பாட்டு ஞாபகத்திற்கு வந்திட்டிது"

"ஏன் அவர் சொன்னது பிழையோ... அவை தங்கட விருப்பத்திற்கு ஒரு ஒப்பந்தம் செய்யினம் என்றால்... அதைப்பற்றி நீ ஏன் குழம்புகிறாய்?"

"முந்தியும் இப்பிடித்தானே டிக்ஸிற் காலத்திலை இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒன்று நடந்து நாங்க பட்ட அவலம் தெரியுந்தானே.. எங்கட பிரச்சினைக்குத் தீர்வுகாண என்று செய்த ஒப்பந்தமே அப்படியென்டால்... இந்த அவைக்கு மட்டுமான பாதுகாப்பு ஒப்பந்தம் மட்டும் எங்களைப்பாதுகாக்கும் என்று நம்பலாமே"

"நல்லாச்சொன்னாய் இவையிட ஒப்பந்தம் எப்பவும் எங்களை அழிக்கவரும் தீப்பந்தம் தான்..."

"ஆனால், ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு தீப்பந்தம் என்ற பாட்டை அதுதான் எங்கடை காசி ஆனந்தன் பாட்டை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டால் நல்லது"

தெருவாசி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீன்பிடிப் படகொன்றின் மீது கடற்படையின் ரோந்துப் படகு மோதியதில் இரு மீனவர்கள் காயமடைந்தனர். அத்துடன் அவர்களது படகும் மூழ்கடிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் முனைப் பகுதியைச் சேர்ந்தவர்க ளான எஸ்.அருள்ஞானமணி (வயது 30) மற்றும் லோறன்ஸ் சின்னாசி முத்து (வயது 38) ஆகிய இரு மீனவர்களே காயமடைந்தவர்கள்

கடந்த செவ்வாய் மாலை இந்த இரு மீனவர்களும் படகொன்றில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து 5 கடல் மைல் தூரத்திற்கப்பாலுள்ள கடலில் இவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்

இதன்போது இரவு பத்து மணியளவில் வந்த கடற்படைப் படகே அவர்களின் மீன்பிடிப்படகுடன் மோதியது. சம்பவத்தில் காலில் காயமடைந்து கடலில் நீந்திக் கொண்டிருந்த இவர்கள் இருவரையும் மீட்ட கடற்படையினர் காங்கேசன் துறைக் கடற்படைத்தளத்துக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர்.

இதேவேளை சம்பவத்தில் மூழ்கிய படகு வெளியிணைப்பு இயந்திரத்துடன் ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்டு கரைக்கு நேற்றைய தினம் கொண்டுவரப்பட்டது. காயமடைந்தவர்கள் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் (202)

### விசர்நாய் கடித்து பெண் மரணம்

விசர்நாய் கடிக்கு இலக்காகி பெண்ணொருவர் மரணமாகினார். இரு மாதங்களுக்கு முன்னர் நாய் கடித்ததாகவும், அதற்குரிய தடுப்பூசியை இவர் போட்டுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் கடந்த சனிக்கிழமை வலிப்பு ஏற்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த ஏகாம்பரம் கமலாதேவி (வயது 52) என்பவரே மரண மானவராவார். (ச)

## ஜப்பானிய உயர்மட்ட...

தூதுக்குழுவொன்று இலங்கையுடனான பொருளாதார உறவுகளை அதிகரிப்பது தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக இன்று கொழும்பு வரவுள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பொருளாார கூட்டுறவுப் பிரிவு பிரதி இயக்குனர் மொரே ஹிடே யொஷிகாசா தலைமையிலே இந்தக்குழு இலங்கை வரவுள்ளது.

இலங்கைக்கு நிதி உதவியையும், தொழில்நுட்ப கூட்டுறவையும் வழங்குவதற்கான முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களில் இத்தூதுக் குழு ஈடுபடும்.

கொழும்புக்குவரவுள்ள ஜப்பானிய உயர்மட்டத் தூதுக்குழுவிற்கும் இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது.

இந்த உயர்மட்ட தூதுக்குழுவில் இடம்பெற்றுள்ள ஏனைய அதிகாரிகள் ஜப்பான் வெளியுறவு அமைசு மற்றும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு ஏஜென்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்த உயர்மட்ட தூதுக்குழுவினர் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யுனிசெப், கொழும்புத் திட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் ஆலோசனைகளைப் பெற விருப்பதுடன் பிரதான உதவி வழங்கும் நாடுகளின் நிறுவனத்தலைவர்களையும் சந்திக்கவுள்ளது.

இத் தூதுக்குழு அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோரையும் சந்திப்பதுடன் புனர்வாழ்வு தொடர்பான முதற்கட்ட தகவல்களை சேகரித்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்யவுள்ளது.

## இளைஞர்களின் தாக்குதலில்...

நேற்றுமுன்தினம் இவரது பிள்ளைகளைத் தேடி இவர் தங்கியிருந்த வீட்டிற்கு வந்துள்ளது. ஆனால், கொலைசெய்யப்பட்ட வயோதிபர் மட்டுமே தனிமையில் இருந்தார்.

ஆத்திரம் கொண்ட குழுவினர் தடிகள், பொல்லுகளால் வயோதிபரைத் தாக்கிக் காயப்படுத்தினர். இவர்களது தாக்குதலை அடுத்து வயோதபர் உயிரிழந்ததாக தெரிவிககப்படுகிறது.

காலை பிள்ளைகள் சென்று பார்த்தபோது வயோதிபர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இவரது சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு, பிரேத பரிசோதனைகள், மரண விசாரனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் பேரில் நான்கு இளைஞர்களை சுன்னாகம் பொலீஸார் கைது செய்தனர். இவர்கள் வழங்கும் தகவலையடுத்து ஏனையோரும கைது செய்யப்படலாம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

## தென்மராட்சி தெற்கு...

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயம் எனும் பொருத்தமற்ற காரணத்தைக்கூறி தமது இராணுவ நலன்களைப் பேணுமுகமாகவே தமது மீள்குடியேற்றம் தடைசெய்யப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தினால் இங்கிருந்து இடம்பெயர்ந்த எமது குடும்பங்கள் கடந்த நான்கு வருடங்களாக அகதிவாழ்க்கையே வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் படைத்தரப்பு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது இப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியாதென அறிவித்துள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக சாகும்வரையான உண்ணாவிரதத்தை முன்னெடுப்பதென்ற முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு...

ஜெயவர்த்தனவும் பாதுகாப்பு அமைசசினால் காரணம் எதுவும் கூறப்படாமலேயே கடந்தவாரம் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை - இந்த இரண்டு அதிகாரிகளினது பதவிநீக்கங்களும் ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணி உருவானதை அடுத்தே மேற்கொள்ளப்பட்டதாகவும் - இதில் ஜே.வி.பியினர் பின்னணியில் இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக - அமைச்சுக்களில் பணிபுரியும் அதிகாரிகள் எவரையும் மாற்றுவதற்கு ஜே.வி.பி., அரசுக்கு அழுத்தம் கொடுக்காது எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### சோமவன்ச...

மிருந்து எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை.

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் இணைப்பாளராகச் செயற்பட்ட மங்கள சமரவீரவுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த நடவடிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து இந்தக் கூட்டணிக்கு ஆதரவாகவுள்ள ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரர் அனுர பண்டாரநாயக்கவை சோமவன்ச அமரசிங்க சந்தித்தார்.

நேற்றுமுன்தினம் றொஸ்மிட் பிளேஸில் உள்ள அனுரா பண்டாரநாயக்கவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## சிறுமி மீது பாலியல்...

அந்தச் சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் ஏற்கனவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில், ஏனையோரை அடையாளம் காண்பதற்காக அடையாள அணிவகுப்பொன்று நேற்று யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.

பதில் நீதிபதி எம்.கேசவன் தலைமையில் நடைபெற்ற இந்த அணிவகுப்பின் போதே சந்தேக நபர் இருவரையும் குறித்த சிறுமி அடையாளம் காட்டினார். நான்காவது நபரை அடையாளம் காட்ட சிறுமி தவறியமையினால் அவரை 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அடையாளம் காட்டப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, இந்த வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகளை அடுத்த மாதம் 1[illegible] ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## சமாதான முயற்சியை...

னாண்டோ இலங்கை அரசியல் நிலவரம் மற்றும் இந்தியாவின் பங்களிப்பு ஆகியன குறித்து மேலும் தகவல் வெளியிடுகையில்

இப்போதுள்ள சூழ்நிலையில் இந்தியாவிடம் இருந்து உளரீதியான ஆதரவையே நாம் கோரியுள்ளோம். இநதியாவில் உள்ளது போன்று ஒரு சமஷ்டி அமைப்பு முறையினை உருவாக்குவது குறித்து இலங்கை அக்கறை கொண்டிருக்கிறது.

இந்தியாவின் ஆதரவின்றி இலங்கைத் தவில் அமைதியை ஏற்படுத்தி விடமுடியாது. இதன் காரணமாக இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்து - அவர்களின் உளரீதியான ஆதரவை கோருவதற்குத் திட்டமிட்டுள்ளேன்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்து புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்து விவாதிக்கவுள்ளேன்.

இலங்கை இந்தியாவுடனான எந்தவொரு புதிய ஒப்பந்தத்தினையும் ஏற்படுததவில்லை. இரண்டு நாட்டிற்குமிடையே ஏற்கனவே இருந்து வந்த ஆயதவிற்பனை ஒப்பந்தமொன்றை அலுவலக ரீதியில் முறைப்படுத்துவதற்காகவே மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இது சிலரது மனதில் மனதில் அச்ச உணர்வினையும் தேவையற்ற கற்பனையும் ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில ஹேரத் இந்தியா வந்து ஜோர்ஜ் பெர்னாண்டஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார் என்பது உண்மையே. அதற்காக அது ஆயுதப் பரிகரண ஒப்பந்தமெனக் கூறிவிட முடியாது.

தற்போது சமாதானப் பேச்சு முனனெடுக்கப்பட்டுவரும் நிலையில் ஆயுத ஒப்பந்தமொன்று செய்து கொளளப்படவேண்டிய தேவை எமக்கில்லை.

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டுமானால் இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. அதற்காகவே அதன் நட்பைத் தொடர்ந்தும் பேணிவருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசியல்...

சமாதான முயற்சியில் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளோம். அதனாலேயே தென்னிலங்கையில் பெரும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு எமது செயற்பாடுகளுக்கு பெரும் அரசியல் நெருக்கடி தோன்றிய போதிலும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் நம்பிக்கையுடன் செயற்படுகின்றோம்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள் ஓரங்கட்டப்பட்ட நிலையில் கூட நாம் யுத்த நிறுத்தத்தை மிகவும் நிதானமாகக் கடைப்பிடித்து வருகின்றோம்.

அரசியல் ரீதியாக எமது உரிமைகளைப் பெறுவதற்கே நாம் முயற்சிக்கின்றோம். யுத்தத்தால் அழிவுகள் உண்டாவதை நாம் விரும்பவில்லை.

சிங்களத் தலைமைகள் விரைவில் ஓர் உடன்பாட்டிற்கு வந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் ஆசைகளும் வீணாகிவிடாமல் சிங்கள மக்களின் பெரும்பாலோரின் வேண்டுதலுக்கு செவிசாய்த்து பேச்சின் மூலம் தீர்வு காண்பதற்கே நாம திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

சமாதானம் மலர்வதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் தேவை என்ற வகையில் எமது ஒத்துழைப்பை வழங்கிவருகிறோம்.

படையினரும் இவ்விடயத்தில் உறுதியாக நடந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி...

கட்சியுடன் சேர்ந்திருக்கின்ற போதிலும் சமாதான முயற்சி விடயத்தில் இரு கட்சிகளுக்குமிடையே வேறுபட்ட கருத்தே நிலவுமெனத் தெரியவருகிறது.

தமிழ் மக்களின் அறிலாஷைகளைப் புரந்து கொண்டு கூட்டுச் சேர்ந்த இரு கட்சிகளும் ஒன்றாகக் கூடி எம்முடன் பேசுவதற்க்கு முன்வந்தால் அது குறித்து எமது தலைமை தீர்மானிக்கும்.

சமாதானம் பற்றிய நம்பிக்கை வளர்ந்துவரும் வேளையில் பாதுகாப்பு ஒப்பந்தம் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் இலங்கை அரசாங்கம் இராணுவரீதியிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தமிழ்மக்கள் மத்தியில் அச்ச உணர்வையும் சமாதானத்தின் மீது சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. அவற்றைத் தவிர்த்துக்கொள்வதே தற்போதைய சமாதான நடவடிக்கை நிலையில் நல்லதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்

மஹஜன சம்பத
பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1585 திகதி: 27.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| D | 8 | 0 | 4 | 5 | 6 | 4 |

(சி-2019)

## மரண அறிவித்தல்

### வைத்தி கந்தையா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கூழாவடி ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்ட - வைத்தி கந்தையா 26.01.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. வைத்தி வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகம்மாவின் அன்புக் கணவருமாவார். இவர் காலஞ்சென்ற கா.நாகம்மா, இராசலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற வை.வேலுப்பிள்ளை (வட்டுக்கோட்டை), வை.தியாகராசா (புத்தூர்), வை.சின்னத்துரை (பிரான்ஸ்) வை.நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாலன், செல்வராணி, சிவராசா, சிவநேசன் (பிரான்ஸ்), சிவசக்திநாதன், சிவந்தமலர், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, சி.கா.செந்திவேல், நிமலராணி, சுதா, மல்லிகாதேவி, தேவராஜா, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 29.01.2004 இன்று காலை 10.00 மணிக்கு கூழாவடி ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று ஆனைக்கோட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.சிவபாலன்.
(மகன்)

கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி/2183)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.